# நேசக் கரங்கள்



எழுதியவர்
ஹொரகொல்ல
**ஏ. ரஹ்மான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசக்கரங்கள்

எழுதியவர்
ஹொரகொல்ல
**ஏ. ரஹ்மான்**

**கலைஞர் கம்பளைதாசன்**
அவர்களின்
நாற்பது ஆண்டுகால பொதுப்பணிகளைப்
பாராட்டி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசக்கரங்கள்

கலைஞர் கம்பளைதாசன்
அவர்களின்
பொதுக்பணிகள் பற்றிய
குறிப்புகள்

முதற்பதிப்பு : 1996 மார்கழி

அச்சுப்பதிப்பு
**கௌரி பிறின்ரேஸ்**
207, இரத்தினசோதி சரவணமுத்து மாவத்தை,
கொழும்பு - 13.

வெளியீடு
பாராட்டு விழாக்குழு,
**முத்தமிழ் மன்றம்,**
285/16, மாவத்தை வீதி,
கொழும்பு - 15.

அன்பளிப்பு : ரூபா 50 /=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இந்நூலுக்கு பதிப்புரை எழுதும் வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்ற அதே நேரத்தில் இந்த மதிப்புரைக்கு நான் ஒரு வகையில் தகுதியுடையவன் என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் பதினைந்து வயது நிரம்பிய ஓர் சிறுவனாகவே அவர் எனக்கு அறிமுகமானார். சிறுவனென்றாலும் மிகவும் சுறு சுறுப்பாகவும், அறிவுத் தாகம் கொண்டவராகவும், எதையாவது சாதித்துகாட்டவேண்டும் என்ற உத்வேகத்தால் உந்தப்பட்டவராகவும் காணப்பட்டார். அடக்கமான குணமும் துடுக்கான பேச்சுத்திறமையும் அந்த வயதிலிருந்தே அவரிடம் பிரகாசமிட்டதை கண்ட நான், எதிர் காலத்தில் இவர் மக்களால் பாராட்டுக்குரியவராக உயர்வார் என எண்ணாமலில்லை.

பேரறிஞர் அண்ணாவின் அறிவாற்றலில் மூழ்கி, கலைஞர் கருணாநிதியின் கருத்தோவியங்களால் கவரப்பட்டு பகுத்தறிவுப் பாசறையில் வீறு நடைபோடத் தொடங்கினார் கம்பளைதாசன் அவர்கள். அண்ணாவை தன் மானசீக குருவாகவே எண்ணி செயல்பட்டு வந்த இவர் கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்த மண்ணில் வாழும் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகவும், கலை - கலாசாரம், இலக்கியத்துறை வளர்ச்சிகளுக்காகவும் தன்னால் இயன்ற சிறந்த சேவையை செய்திருக்கிறார் என்றால் அது மிகையாகாது. அழகிய தமிழினை இனிமையாகப் பேசவேண்டும், இளைஞர்கள் மத்தியில் தமிழார்வம் பெருகுதல் வேண்டும், இலக்கியம் மிளிரவேண்டும் என்றெல்லாம் இன்பக் கனவுகள் பல கண்டு அதனை நனவாக்கும் வண்ணம் மன்றங்கள் இயக்கங்கள் கழகங்கள் என்று பல ஆரம்பித்து இளைஞர்களுக்கு அறிவியல் ஆற்றலை எற்படுத்தி நல்ல பல நாடகங்களை எழுதியும் நடித்தும் தன் நடிப்பாற்றலோடு உள்ளத்தில் உறங்கிக் கிடந்த கருத்துகளை எடுத்தியம்பி வந்தார் கம்பளைதாசன்.

காலங்கள் காற்றெனக் கடந்து சென்றன அவரது ஆற்றலும் குன்றுபோல் நிமிர்ந்து நிற்கின்றன. அவரின் உயர்வுக்கு எனக்கும் பங்குண்டு என அவர் பலமுறை கூறுவதைக் கேட்டு என் உள்ளம் பூரிப்படைந்ததுண்டு. இத்தகைய வார்த்தைகள் அவருடைய பெருந்தன்மையினையும் நன்றியுணர்வினையும் பிரதிபலிக்கச் செய்கின்றன. இதுபோன்ற மனோபாவமும் நன்றி உணர்வும் கொண்டவர்களை இன்று காண்பது மிக அரிது எனக்கூறலாம். பொருளாதாரத்துறையில் பின் தங்கியிருந்தபோதிலும் வாழ்க்கையில் எதிர் நிச்சலடித்து முன்வந்தவர் கம்பளைதாசன். நட்புக்கு இலக்கணமாகவும், கடமைக்கு செயல்வீரராகவும் இயங்கியதன் பயனாக இன்று அவரை நாடேபோற்றும் வண்ணம் பாராட்டுக்குரியவராகியுள்ளார். சமூக ஒளி (நூருல் மில்லத்) எனவும், சமாதான நீதவானாகவும் கௌரவமும், பட்டமும் பெற்று நம் முன் நிற்கின்றார் கலைஞர்.

கலைஞர் கம்பளைதாசனின் பொது வாழ்வினை மய்யமாகக் கொண்ட இந் நூலை எழுதிய எ. ரஹ்மான் அவர்கள் கம்பளைதாசனின் சிறுவயதிலிருந்தே அவரை நன்கு அறிந்தவர் ஆதலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைப்பற்றிய தெளிவான விளக்கங்களை தந்து சிறப்பித்தமைக்காக நன்றி தெரிவிப்பதோடு இந்த புத்தக வெளியீட்டு குழுவைச் சார்ந்த கருபத்மநாதன் , ஏ. ராபிக் ஆகியோருக்கும் அச்சகத்தாருக்கும் மற்றும் உதவிக்கரம் கொடுத்த உத்தமர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வருங்கால சமூகத்திற்கு இந்நூல் ஒரு வழிகாட்டலாக அமையும் என நம்புகிறேன். கலைஞர் கம்பளைதாசனின் நற்பணிகள் தொடர்ந்தும் வளரட்டும் - உயர்வடையட்டும் என உளமாற வாழ்த்துகிறேன். இந்நூல் சம்பந்தமான முழு உரிமைகளும் கலைஞர் கம்பளைதாசன் அவர்களக்கே உரியது என்பதையும். இதன் எந்த உரிமையும் வேறு எவருக்கும் இல்லை என்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

**ஆர். ராதா கிருஷ்ணா** (R. R. K. டேலர்)

தலைவர்
முத்தமிழ் மன்றம்.
285/16, மாவத்தை றோடு.
கொழும்பு - 14.



கலைஞரினால் ஆண்டு தோறும் கொழும்பில் நடத்தப்படும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களது பிறந்ததினவிழா 1994ல் நடத்தப்பட்டபோது எடுத்தபடம். வேலணைவீரசிங்கம் அவர்கள் திரை நீக்கம் செய்வதையும் கலைஞரும். திரு. ஆர். ஆர். கே. டேலரும் அருகில் நிற்பதையும் படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கருத்து

ஆற்றலைப் போற்றுவதும் ஆழகை ரசிப்பதும், அன்பை நேசிப்பதும் மனித இயல்பு அங்கே மிகை பகையாகிவிடாது.

குழந்தையைச் சீராட்டுகின்ற தாயின் தாலாட்டு வரிகளில் "மிகை" யைக் கண்டு குறை கூறுவது பெருந்தன்மையற்றதாகும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் - தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்டதாய்"

என்ற பொய்யாமொழிக்கமைய நாம் பெருமைகண்டு மிகை கொள்வது இயற்கை, குறள் கூறும் அறவழிக்குப் பொருத்தமாக தகுதியுள்ளவராகத் தலைநிமிர்ந்து நின்று கொண்டிருப்பவர்தான் எமது பதிப்புக்குரிய சமூகஒளி (நூருல்மில்லத்) கலைஞர் கம்பளைதாசன் ஜே.பி. அவர்கள். அத்தகைய கண்ணியத்துக்குரிய ஒரு சான்றோனின் பெற்றோரின் நிலை நின்று அவரைப்பற்றிய சில பல விடயங்களை எடுத்துக்காட்டியுள்ளேன்.

கூறியவை கூறலும் மிகைப்படுத்தலும் தவிர்த்துக் கொள்ளமுடியாதவை. ஒருபெற்றோரின் பலவீனம் பொறுத்துக்கொள்ளும் தன்மையே.

அன்பன்
*ஏ. ரஹ்மான்*

இல. 2/15, ஓர்ச்சட்வத்தை,
ஹொரகொல்ல,
நிட்டம்புவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புரை

"சமூக ஒளி" கலைஞர் கம்பளைதாசன் ஜே. பி. அவர்கள் பாராட்டப்படுவதும் அவரது நாற்பது ஆண்டு காலப் பொதுப்பணிகளைக் குறிக்கும் நூல் வெளியிடுவதும் எம்மையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கும் நிகழ்வுகளாகும். அவரின் முப்பது ஆண்டு கால நட்பு அன்றும் இன்றும் எம்முடன் ஒரே விதமானதாகவே இருப்பதே இந்த மகிழ்வுக்குக் காரணமாகும்.

நட்பு என்பது பலவிதமானதாக இருப்பதையும், பயன்படுவதையும், முறிவடைவதையும் இக்காலத்தில் நாம் காணமுடிகிறது. நீடித்த நட்பு மிகமிக அரிதாக இருக்கிறது.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பதே நட்பு" என்று தமிழ் மறை கூறுகிறது. மனித நேயத்துடனும், கொள்கை இலட்சியங்களுடனும் பின்னிப்பிணைந்துள்ள நட்பு நீடித்து நிற்பதை நாம் காண்கின்றோம்.

தேவைக் கேற்ப சிலர் நட்பை ஏற்படுத்துகின்றனர். தேவைமுடிந்ததும் நட்பை முறித்து விடுகின்றனர். சந்தர்ப்பங்களுக்கேற்பவும் நட்பு உருவாகிறது பின் கலைந்து போகிறது. இவை முகநக நட்புகளாகின்றன. இதய சுத்தியுடனான அகநக நட்பே நீடித்து நிற்கின்றன. ஒருவரை ஒருவர் புரிந்துணர்வோடு ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து, நன்மை தீமைகளில் உறவு கொண்டாடி நிற்கும் ஒரு நட்பு சாதாரண நட்பாக இருக்க முடியாது. காரணத்தோடு உருவாகியதாக அது இருக்கும்.

ஒருவருடைய பண்பு, ஒழுக்கம், நோக்கம், கொள்கை என்பன எம்முடன் இரண்டறக் கலக்கும் போது அது பிரியாத நீடித்த நட்பாக அமைகின்றது. அந்தவகையில் நண்பர் கம்பளைதாசன் அவர்கள் என்னுடன் பகுத்தறிவுக் கோட்பாட்டில், சமூக நற்பணிகளில் முப்பது ஆண்டுகள் நண்பராக வாழ்ந்துள்ளார். அவர் இளைஞனாக இருந்தகாலம் முதல் இன்று வரை குலையாத நட்புடை நண்பராக எம்முடன் திகழ்ந்து வந்துள்ளது இன்று எம்மையும் மகிழ்விக்கின்றது.

பொதுப்பணிகளில் அவர் முன்னெடுத்துச் செல்லும் எந்தக்காரியங்களையும் தனது உற்ற நண்பர்களுடன் கலந்தாலோசிக்காமல் அவர்செய்ய முயல்வதில்லை. இதனால் அவர்வாழ்வில் இடம்பெற்ற நற்பணிகள் பலவற்றில் எமக்கும் பங்கிருந்து வந்துள்ளமை நீடியநட்புக்கும், அன்புக்கும் காரணியாக இருந்துவந்துள்ளன.

ஒருவனை அளவிட, அவனது நண்பனை அறிந்து கொண்டால் போதும் என்பது ஒரு பொதுமொழி இந்த வகையில் நண்பர் கம்பளைதாசனை அறிவதும், அவரது நண்பர்களை அறிவதும் மிக இலகுவானதாகும். அவர் எல்லாருடனும் நட்புவைக்க விரும்பமாட்டார். தனது கொள்கையுடன் இணைந்தவர்களுடனே அவரது நட்பும் நம்பிக்கையும் உருவாகும்.

கொள்கை, இலட்சியம், குறிக்கோள் பேசுபவர்கள் அவற்றை மேடைப் பேச்சளவில்த்தான் கடைப்பிடிக்கின்றனர். ஆனால் நண்பரின் இலட்சியம், கொள்கை நடைமுறைகள் யாவும் சொல்லிலும், செயலிலும் ஒரே விதமானதாகவே இருக்கும். இதுவே அவரது வாழ்வின் தனிச் சிறப்பு எனலாம்.

வறுமையிலும் நேர்மை, கோபத்திலும் பொறுமை, ஏழ்மையிலும் பரோபகாரம் இதுபோன்ற மனித நேய பண்புகள் நிறைந்தவர் நண்பர் கம்பளைதாசன் என்பதில் நண்பர்களாகிய நாம் மகிழ்ச்சியடையாமல் இருக்கமுடியாது.

அன்பன்

**வேலணை வீரசிங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர். சிவகுருநாதன் M. A.
சட்டத்தரணி
"தினகரன்" முன்னாள் பிரதம ஆசிரியர்

# தமிழ் உள்ளம்

கம்பளையாரை நினைத்ததும் எனது சிந்தனை அலைகள் ஐம்பதுகளின் முன்கூறுக்கே செல்வதுண்டு. அன்று கலைஞர் கம்பளையார் எவரும் காமுறும் பருவத்தினன், கட்டழகன், வேங்கைபோல் சீறும் இயல்பினன். எதுகைமோனையுடன் எழில்மிகுதமிழில் பேசும் ஆற்றலுடன் திகழ்ந்தவராக இருந்தார்.

சிலரை அவர் வைதபோகு அருகே நின்றிருக்கிறேன் அத்தமிழ் கூட அழகானதாகவே இருக்கும். அந்தவாலிப பருவத்தில் இவரோடு பேசிக் கொண்டிருப்பது எனக்கு பேரின்பம் தருவதாக இருக்கும். இவர் ஓர் அறிவுக் கடல், தமிழ்பித்தன், தமிழே இரவது மூச்சாகவிருந்தது. இவரோடு சம்பாஷிக்கும்போது இத்தகு எண்ணங்களே இன்றும் எனக்குத் தோன்றுவதுண்டு. இவர் ஒரு பகுத்தறிவுப் பொக்கிஷம் என்ற கருத்தே எனக்கு எப்போதும் இருந்தது.

பகுத்தறிவாளர் வேலணை வீரசிங்கம் அவர்கள் மூலமே கம்பளையாளரின் நட்பு எனக்கு கிடைத்தது. அமரர்கள் வேலாயுதம், ஏபிரஹாம் கோவூர் போன்ற பகுத்தறிவாளர்கள் இவர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததால் அடிக்கடி நான் சந்திப்பதுண்டு.

தமிழ் நாட்டிலிருந்து அக்காலத்தில் பகுத்தறிவுபுரப்பும் ஆட்கள் அதிகம் வருவதில்லை. ஆனால் வேலணையார் மூலம் கம்பளைதாசன் இவற்றைப் பெற்று விடுவார். இதனால் கம்பளையாரின் பேச்சில் புரட்சிகரமான கருத்துக்கள் பிரதிபலிப்பதுண்டு. புதுமையான தமிழ் சொல் பிரயோகம் காணப்படும். அடுக்கு மொழியில் கம்பளையார் பேசும்போது மெரினா கடற்கரைப் பிரசங்கங்களைக் கேட்பது போன்ற மனத் திருப்தியும், மகிழ்ச்சியும் ஏற்படுவதுண்டு. சில நிமிடநேரம் கம்பளையாரோடு பேசிக்கொண்டிருந்தால் தமிழ் நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் ஏற்படுவதுண்டு. இதனால் இவரை வழியில் சந்திக்கும் போதெல்லாம் ஒரு சில நிமிஷங்களேனும் பேசவேண்டும் என்று என் மனம் தூண்டும்.

கம்பளையார் தமிழ் உணர்வுமிக்கவர். தமிழ் தன் உயிர்போன்றது என்பவர், தமிழை வைதாரைத் தாய் தடுத்தாலும் விடேன் என்று பகிரங்கமாகவே கூறுபவர். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர் அல்லர். நினைத்ததை அப்படியே சொல்லிவிடுபவர். இதனால்த்தான் இவருக்கு நண்பர்கள்பலர். புகைப்படக் கலைஞர் கிங்ஸ்லி செல்லையா இவரது அருங்குணங்கள் பற்றி வாயாரப்புகழ்வார். நாடகத்துறை மூலமாக கிங்ஸ்லியுடன் இவர் நெருங்கிப் பழகியவர். நல்ல நண்பனுக்கு இவர் உதாரணமாக இருப்பவர் என்று அடிக்கடி கூறுவார்.

கம்பளையார் இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்குமிடையே ஒரு கலைப்பாலமாகத் திகழ்ந்து கொண்டேயிருக்கின்றார். தமிழ்நாட்டு இலக்கிய வாதிகள், கலைஞர்கள் கம்பளையாரோடு தொடர்பு கொண்டிருக்கின்றனர். இதனால் இருநாட்டுக்கலைஞர்களிடையேயும் நல்லுறவு வளர்ச்சிகாண்கின்றது.

கம்பளையாருக்கு விழா எடுக்கும் இவ்வேளையில் வாழ்த்துத்தெரிவிக்காத தமிழ் உள்ளமும் இருக்குமா ?

அன்பன்
**ஆர். சிவகுருநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. பொ. செல்லையா B. Sc
கல்லூரி அதிபர்,
"அறிவகம்"
மீசாலை.

# அதிகரிக்கும் அகமகிழ்வு

இந்த மண்ணில் எத்தனையோ பேர் பாராட்டப்படுகிறார்கள், போற்றப்படுகிறார்கள், வாழ்த்தப்படுகிறார்கள், விமர்சனம் செய்யப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாரும் பாராட்டப்படக் கூடியவர்களா ? போற்றப்படத் தகுதியுடையவர்களா ? வாழ்த்துக்குரியவர்களா ? விமர்சிக்கத்தகுதி பெற்றவர்களா? என்பது அவரவர்களைச் சேர்ந்தவர்களால்த்தான் கணிக்கமுடியும்.

ஆனால் இனிய நண்பன் - கொள்கைக்கொழுந்து - இலட்சியச்சுடர் - அன்புக்கலைஞன் நண்பர் கம்பளைதாசன் பாராட்டப்படுவது, பட்டம் பெறுவது, போற்றப்படுவது சமதர்ம இலட்சியவாதிகள், பொதுவுடமைக் கொள்கைவாதிகள், கலை ஆர்வம் நிறைந்தவர்கள், தமிழ்த்தாய் மீது பற்றுக்கொண்டவர்கள் எல்லோரையும் மகிழவைக்கும் நிகழ்வாகும். காரணம் பெரியாரின் அடிச்சுவட்டிலிருந்து ஊறியவர்கள், அண்ணாவின் அறிவிலிருந்து வளர்ந்தவர்கள் எம்நாட்டில் பலர் உளர்.

இவர்கள் அனைவரும் நண்பர் கம்பளைதாசனை நன்கு அறிந்தவர்கள் - தெரிந்தவர்கள். இவர் பாராட்டப்படுவதைக்கண்டு மகிழக்கூடியவர்கள், பெருமைப்படவேண்டிய எமது தோழர்கள் பலர் உளர்.

நண்பர் வளர்ந்த பாசறையுடன் தொடர்புடைய அத்தனை தோழர்களையும் நாம் இன்று நினைவுகொள்ள ஒருவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ள கம்பளைதாசனின் நற்பணிகளை நினைந்து நாம் பெருமைகொள்கிறோம். இதற்கு உறுதுணையாக இருந்துவரும் கம்பளைதாசனின் இணைபிரியா பாசறைத் தோழர்களுக்கும் நாம் என்றும் கடமைப்பட்டவர்களாகின்றோம்.

தோழர் கம்பளைதாசன் அவர்கள் யாழ்ப்பாணத்திலும், தென்மராட்சியிலும் நடந்த தமிழ் சார்ந்த பெருவிழாக்கள் பலவற்றில் கொழும்பிலிருந்து வந்து கலந்து சிறப்பித்து எம்மை மகிழ்வித்த சம்பவங்கள் எல்லாம் இன்று எம் மனக்கண்முன்னே நிழலாடுகின்றன.

நண்பர் கம்பளைதாசன் பாராட்டுப்பெறுவது தேவையானது, செய்யவேண்டியது. இதற்கு எனது நல்வாழ்த்துக்கள், இதயம் கனிந்த பாராட்டுக்கள். தமிழ்த்தாய் என்றும் அவரை அணைத்து தன்பணி செய்திட வேண்டும்.

தோழமையுடன்
*அ. பொ. செல்லையா*
1996-12-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| யார் இவர் | - | 10 |
| முன்னேற்றப்பாதையில் | - | 12 |
| கலைஞரின் மலர்வு | - | 14 |
| உயர்ச்சியில் வளர்ச்சி | - | 16 |
| நாவன்மை | - | 17 |
| சிறப்பம்சம் | - | 18 |
| பண்பு | - | 19 |
| நேரானபாதை | - | 20 |
| மனித நேயம் | - | 21 |
| நினைத்ததை முடித்தவர் | - | 22 |
| இன்னா செய்யாமை | - | 23 |
| சமத்துவம் | - | 24 |
| சமூக ஒளி | - | 25 |
| மிதவாதி நல்ல மதவாதி | - | 26 |
| நட்பு | - | 27 |
| பரிசும் பாராட்டுகளும் | - | 28 |
| நேசக்கரங்கள் | - | 29 |
| நன்றியுடமை | - | 30 |
| ஆற்றல் | - | 31 |
| புரவலர் நட்பு | - | 32 |
| தோழமை | - | 35 |
| பிரச்சாரப்பணிகள் | - | 36 |
| சந்திப்புகள் | - | 37 |
| மீலாத் விழாக்கள் | - | |
| நிதியப்பணிகள் | - | 38 |
| நீங்காத நினைவில் நிற்போர் | - | 39 |
| பெரியோர் நினைவுகள் | - | 40 |
| வெளியீட்டு நிகழ்வுகள் | - | 41 |
| நினைவு கூரும் நிகழ்ச்சிகள் | - | 44 |
| முடிவில் ஒருகருத்து. | - | 47 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1990ல் கொழும்பு சசாக்கா மண்டபத்தில் வேலணை வீரசிங்கம் அவர்களால், ஓவியக்கலை திரு. வி. கே. யின் பொன்விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் கலைஞர் கம்பளைதாசன் உரையாற்றிக்கொண்டிருப்பதையும், பிரபல மூத்த எழுத்தாளரும், பத்திரிகையாளருமான எஸ். டி. சிவநாயகம் மேடையில் அமர்ந்திருப்பதையும் காண்க.



கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்ற உமருப்புலவர் விழாவில் பேராசிரியை நைமா சித்திக் உரையாற்றிக் கொண்டிருப்பதையும், பேச்சாளர்களான பேராசிரியர் நைனா முஹம்மது, எஸ். எச். எம். ஜெமீல், மருதூர். ஏ. மஜீத், கலைவாதி கலீல், கலைஞர் கம்பளைதாசன் ஆகியோர் மேடையில் இருப்பதையும் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இவர் !

"பகை யகத்துச் சாவார் எளியர் - அரியர்
அவையகத்து அஞ்சாதவர்"

போர்க்களத்தினுள் புகுந்து அஞ்சாமல் போர்புரிந்து மடிவோர் பலருண்டு - ஆனால் கற்றோரின் அவைக்களத்தினுள் புகுந்து துணிந்து பேசத் தகுதியுடையவர் ஆயிரத்தில் ஒருவரே. பொய்யாமொழி வள்ளுவப் பெருந்தகை சொல்லுகின்ற அந்த ஆயிரத்தில் ஒருவன் இந்தக் கம்பளைதாசன்.

யார் இவர் என்ன செய்தார் என்று சிலர் கேட்கலாம். சேவையிலோ, தியாகத்திலோ எதுவுமே அறியாத உணராத பலர் இருப்பர். அவர்களில் சிலரில் இப்படிக்கேட்பவர்களும் உண்டு.

பாலப்பருவத்தில் படித்த செயுள் ஒன்று இன்றைய அகாலப்பருவத்தில் என் நினைவுக்கு வருகிறது.

"நற்றாமரைக் குளத்தில் நல்லன்னம்
சேர்ந்தாற் போல் - கற்றோரைக் கற்றாரே
காமுறுவர்" என்பதே அது.

கற்றோர் காமுறும் வண்ணம் கற்றோருக்காகச் செய்ய வேண்டியவற்றைச் சரியாகச் செய்தார் கலைஞர் கம்பளைதாசன்.

"அரியவற்றுளெல்லாம் அரிதே - பெரியாரைப் பேணித் தமராக் கொளல்" என்ற அரும் பெரும் தத்துவத்தைப் புரிந்தவர் அவர்.

அவர் தேர்ந்தெடுத்து நடந்து சென்ற பாதையிலே கேடிகளைச்சந்தித்திருக்கிறார். கோடிகளைக்கண்டதில்லை. நரையும் திரையும் படிந்திருக்கலாம் அவரது உடலில், ஆனால் கறையும் குறையும் படிந்ததில்லை அவரது உள்ளத்தில், எனவே தருவதற்கோ பெறுதவற்கோ அவரிடம் கணக்குமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாழ்வில் பாதை மாறி நடந்ததுமில்லை. போதையேறி நின்றதுமில்லை. வந்த வாழ்வை இறைவன்தந்தவரமாக ஏற்றுக் கொண்டவர். பொது வாழ்வுக்கென்று ஏதும் ஒரு புது வாழ்வைத் தேடிக் கொண்டவரல்ல. அறிஞர் அண்ணா சொன்னார் பொது வாழ்வுக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று. அவரது கொள்கை பரப்புச் செயல் வீரர்களும், வீராங்கனைகளும் இன்றும் பரப்பிக்கொண்டிருக்கும் சிறப்பினையும் கண்டு கொண்டேதானிருக்கிறோம்.

உழைப்புக்கு மதிப்பளித்து உண்மையே உயர்வெனக் கொண்டு சீராக வாழ்ந்து வரும் சத்தியத்திருக்குடும்பத்தின் உத்தமத்தலைவன் நமது கம்பளைதாசன்.

அவர் நினைத்திருந்தால், கையில் விழுந்த வாய்ப்புக்களையெல்லாம் பையில் திணித்திருந்தால், இந்த நாற்பதாண்டு காலத்தில் ஒரு வைரமணி மாளிகைக்குச் சொந்தக்காரனாகியிருக்கலாம்

பட்டத்தையோ, புகழையோ தேடிப்போவதல்ல, பட்டமும் - புகழும் தேடிவர வேண்டும் அதற்குப் பெயர்தான் பொதுப்பணி அதுதான் உண்மையான புகழ் - பெருமை.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாராட்டும் உலகு"

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப்பயன் படும் பெரியார்தம் நல்ல பண்பை உலகம் போற்றும் - புகழும் - பாராட்டும். இந்தவகையில் கலைஞர் மக்களால் போற்றற்குரியவரே.



முஸ்லிம் கலாச்சார அமைச்சினால் வாழ்வோரை வாழ்த்தும் நிகழ்ச்சியில் கலைஞர் கம்பளைதாசன் நூருல்மில்லத் (சமூகஒளி) என்ற பட்டம் பெறும்போது எடுக்கப்பட்டபடம். முஸ்லிம்சமய கலாச்சார இராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர். பிரதம அமைச்சர் ரணில் விக்கிரசிங்க. பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர். ஏ. எல் எம். அபுசாலி, இராஜாங்க அமைச்சர்கள். எம். எஸ். செல்லச்சாமி, இராசமனோகரி புலேந்திரன் ஆகியோர் கலைஞரின் அருகில் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

# முன்னேற்றப்பாதையில்

1955ம் ஆண்டு கம்பளை நகரிலிருந்து ஒரு பாடசாலை மாணவன் கம்பளை சிங்கபிட்டி பத்ரஸாவில் மார்க்கக் கல்வியையும் கற்று வந்தவர். இதன்பின் தலைநகர் வந்து சேர்ந்த இவர் இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள ஒரு நகைமாளிகையில் பணியில் சேர்ந்தார்.

சிறுவனா இளைஞனா என்று முடிவு செய்யமுடியாத இரண்டுமற்ற வயது அந்தக் கம்பளை இளைஞருக்கு. ஏற்கனவே இளைஞர்களைப் போன்று மேடைப் பேச்சிலும், அடுக்குமொழிக் கவர்ச்சியிலும், கலை இலக்கிய ஆர்வத்திலும் மூழ்கியிருந்தவரான சாகுல் ஹமீத் என்னும் அந்தக் கம்பளை இளைஞர் கொழும்பு நகரில் இயங்கிவந்த இ. தி. மு. கழக இளைஞர்களோடு தொடர்புகளை ஏற்படுத்தினார்.

வாழைத்தோட்டத்து டயஸ் பிளேஸ் இருபத்திரெண்டாம் இலக்கம் அண்ணன் டீஎம்பீ அவர்களின் வசிப்பிடம் இன்று. சென்னையில் அண்ணா அறிவாலயம் இயங்குவது போல இங்கு டீ.எம்.பீ. இல்லம் கழகத் தோழர்களின் இணைப்புக்கு அன்றுதுணையாக இருந்து வந்தது.

கவிஞர்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகள், கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், சிந்தனையாளர்கள் போன்ற பல்வேறு சமூக நலத்துறைகளைச் சேர்ந்தவர்களும் வந்து போகுமிடமாக அது இருந்தது. இனமதபேதமில்லாத இ.தி.மு. கழக தோழர்கள் ஒருதாய் மக்கள்போல அங்குவந்து கூடிக்கலைவார்கள்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரசின் உத்தியோகபூர்வ பத்திரிகையான "நவஜீவன்" இதழ் அண்ணன் "டீ.எம்.பீ. அவர்களை ஆசிரியராகக் கொண்டும் இ. தி.மு. கழக ஏடான "பூங்கா" வார இதழ் தோழர் அதிமணியை ஆசிரியராகக் கொண்டும் இயங்கிவந்த அவை அதே முகவரியிலிருந்தே வெளியாகின. தோழர் எச். பத்மநாதன் ஏ. ரஹ்மான் ஆகியோரைக் கூட்டாசிரியர்களாகக் கொண்ட "அண்ணா" "நாம்" ஆகிய சிற்றேடுகளும் அந்த இல்லத்திலிருந்தே வெளிவந்து கொண்டிருந்தன.

இக்காலகட்டத்தில் ஏ. சி. சாகுல்ஹமீத் என்ற அந்த கம்பளை இளைஞர் அந்த இடத்தோடு தொடர்பு கொண்டு அடிக்கடி வந்து போகிறார். அன்பான குணம், புன்னகை பூத்துப் பொலியும் முகத்தழகு என்பன அவர்மீது பலரையும் கவரவைத்தன. கழகத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டுழைத்த கொள்கைக்குமரன் ஃபாரூக், நலன்விரும்பி வி. ஆர். எம். பாரூக் ஆகிய இளைஞர்களுடன் நட்போடு நெருங்கிய தோழமை கொள்கிறார் சாகுல் ஹமீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த பேச்சாளரும், இளைஞர் குழுவின் தளகர்த்தராகவுமிருந்தவருமான மறைந்ததோழர் பீ. எம். ஜலால் அவர்களும் சாகுல் ஹமீத் மீது நெருக்கமான தோழமை கொண்டிருந்தார். இத்தனை இனிய நட்புகளின் துணையோடு நடிகனாக, எழுத்தாளனாக, மேடைப்பேச்சாளனாக வரவேண்டுமென்ற உந்திப்பால் இவற்றுக்கான பயிற்சிகளில் தன்னை ஈடுபடுத்தத் தொடங்கினார். தனது தொழில், கடமை நேரங்கள் தவிர்ந்த மிகுதியான நேரமெல்லாம் கழக பயிற்சிமுயற்சிகளிலேயே தோழர்களுடன் ஈடுபடத் தொடங்கினார்.

வத்துகாமத்திலிருந்து வந்த ஏ. ரஹுமான் தலை நகருக்குவந்த சிலகாலத்திலேயே இ. தி. மு.க.. இதழான "பூங்கா"வின் இணையாசிரியராக பொறுப்பேற்றுக் கொள்கின்றார். அப்போது மலையகத்தில் இடம் பெற்ற ஒரு தற்கொலை நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு கம்பளைதாசன் எழுதிய சிறுகதை "பூங்கா"வில் "ஜோடிக்கல்லறை" என்ற பெயரில் பிரசுரமாகி பலராலும் பாராட்டுப் பெற்றது.

அண்ணாதாசன், கண்ணதாசன், வாணிதாசன் என்ற புனைபெயர்களில் கவனம் செலுத்துகிறார் கம்பளைசாகுல்ஹமீத் "ஜோடிக்கல்லறை" என்ற சிறுகதைமூலம் ஏற்பட்ட விளம்பரத்தின்பின் "கம்பளைதாசன்" என்ற புனை பெயரையே தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்.

"கடமை வீரன்" என்ற மேடை நாடகத்தை கழகத் தோழர்கள் பலருடன் சேர்ந்து இயக்கியும் நடித்தும் குறுகிய காலத்தில் பல மேடைகளில் ஏற்றிக்காண்பித்தார். வளரும்பயிரை முளையில் தெரியும் என்ற முது மொழிக்கமைய முதல் நாடகத்திலேயே அவர் தனது திறமைகளை வெளிக்கொணர்ந்தார். இதிலிருந்து கம்பளைதாசன் புகழ் கலை உலகில் பிரகாசித்தது. கழகத்திற்கு இவரது கலைத்திறன் பெரிதும் உதவியது. அதுபோல இவரது கலை வழர்ச்சிக்கு கழகத்தின் ஆதரவும் நிறைந்திருந்தது.



இரத்தினபுரியில் அகில இன நல்லுறவு ஒன்றியம் நடத்திய சாமஸ்ரீ பாராட்டு விழாவில் ஒன்றியத்தலைவர் ஆனந்த சரத்மல்வராச்சி கலைஞருக்கு பொன்னாடைபோர்த்தி "கலைஒளி" பட்டம் வழங்கப்படுவதையும், ஒன்றியச் செயலாளர் நுகவலஹுசையின் மலர்மாலை அணிவதையும் இப்படத்தில் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞரின் மலர்வு

கலைத்துறையிலும் பொதுப்பணிகளிலும் நாற்பது ஆண்டு காலத்தை நிறைவு செயது முன்னோக்கிக் கொண்டிருக்கும் இவ்விழா நாயகன் சமூகஒளி (நூருல்மில்லத்) கலைஞர் கம்பளைதாசன் சமாதான நீதவான் அவர்களைப் பற்றி சொல்லும்போது அவரை கலையிலும், தமிழ் ஆர்வத்திலும் வீறுநடை போட காரணியாக இருந்த இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றியும் சில கருத்துக்களைச் சொல்லியாக வேண்டும்.

கலைஞரின் இன்றைய வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் இ. தி. மு. க. தொடர்புகளும் கழகத்தோழர்களது உதவியும் ஒத்தாசையும் நிறைந்திருந்தன என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

எடுத்துக்கொண்ட பொருளுக்குத் தேவையான சிலவற்றை மட்டுமே இங்கு தொட்டுக்காட்டுகிறேன். சில சம்பவங்கள் விடுபட்டிருக்கலாம், சில முக்கியஸ்தர்கள் விடுபட்டிருக்கலாம். சில கால நேரப்பதிவுகள் முன்பின்னாக இடம் பெற்று விட்டிருக்கலாம். இவை திட்டமிட்டதவறுகள் அல்ல. கழகம் சம்பந்தமான ஈடுபாடு அபிமானம் ஆற்றல் உழைப்பு தியாகம் என்பவை பற்றிகணக்கிலெடுக்கும்போது கலைஞர் இரண்டாமிடத்திற்குரியவரல்ல. கழகத்தின் மூத்தவர்களுடன் இணைந்த தோழன் என்றுதான் கூறவேண்டும்.

ஆற்றல்மிக்க மேடைப் பேச்சாளரும் அன்றைய துடிப்புமிக்க இளைஞருமான தோழர் ஏ. இளஞ்செழியன் அவர்களை பொதுச் செயலாளராகக் கொண்டே இலங்கையில் இ. தி. மு. க. உருவாகியது. அதே கால கட்டத்தில் கண்டிப்பகுதியில் வத்துகாமத்தில் ஒரு இ. தி. மு. க. உருவானது கண்டி க. ப. சிவம் தோழர் பர்ணாந்து ஆகியோரும் ஒரு இ. தி. மு. க. கிளையை ஆரம்பித்து செயற்பட்டனர்.

தலைநகரிலிருந்து கண்டிப்பகுதிக்கு பறந்து சென்ற இளஞ்செழியன் அவர்கள் அந்த அமைப்புக்களை கிளைகளாக பதிவு செய்து கொண்டார்.

அதேபோல தோழர் அந்தோனி முத்து, தோழர் ஆர். ஆர். கே.டேலர், தோழர் மா. செ. அருள், மாயழகன், பெரியண்ணன், குலசேகரன் ஆகியோரின் நிர்வாகங்களின் கீழும் இ. தி. மு. கழகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கின மலையகத்தின் அன்றைய பிரசாரப்பீரங்கியும் நாட்டின் நாற்றிசையிலும் மீலாத்மேடைகளில் முழங்கிக் கொண்டிருந்தவருமான டி. எம். பீர்முஹம்மது தலைமையில் ஒன்றிணைப்பை ஏற்படுத்தி இ. தி. மு. க. ஒரு அமைப்பில் ஒரு அணியில் இயங்க முயன்றனர். பி. எம். ஜலால், மணவைத்தம்பி அதிமணி, அருணாசலம். எல். எம். செய்யத்முஹம்மத் ஆகியோர் இதில் இணைந்து செயற்பட்டனர். இப்படி இருந்தபோதும் இ. தி. மு. க. மக்கள் மத்தியில் அப்போது பிரபல்யம் பெற்றுத்திகழ்ந்தது. இனமத பேதமற்ற தோழமை உணர்வு தமிழ்மொழி உணர்வு உயர்ந்து காணப்பட்டகாலம் அது. தோழர் இளஞ்செழியனின் கடுமையான உழைப்பும் சூறாவழிச்சுற்றுப்பயணங்களும் கழகத்தின் வளர்ச்சிக்கு வலுவாக இருந்தது.

சிறந்த பேச்சாளரும், பன் நூலாசிரியருமான டி. எம். பி. அவர்களது பங்களிப்பும் கழகத்திற்குபலமாக இருந்துவந்தது. இனிப்பின் சுவைகண்ட எறும்புகள்போல வந்து சேர்ந்த இளைஞர்கள் தங்களைத் இ. தி. மு. க. தோழர்கள் என்று சொல்வதில் பெருமைப்பட்டுக் கொண்டகாலம் அது.

பெரியாரின் "விடுதலை" அறிஞரின் "திராவிடநாடு" கலைஞரின் "முரசொலி" கவிஞரின் "தென்றல்" நாவலரின் "மன்றம்" நடராசனின் "திராவிடன்" ஆகிய வார-மாத இதழ்கள் அன்றைய வாலிபர்களின் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும்.

வாழைத்தோட்டத்து வாலிகாக்காவின் "தாரகை" மர்ஹூம் வி. நூர் முஹம்மது வின் "தோழன்" டி. எம். பீ யின் "நவஜீவன்" செல்வி சிவபாக்கியம் பழனிச்சாமி கண்டியிலிருந்து வெளியிட்ட "பொண்ணுலகு" "கதிரவன்" "கர்ஜனை" ஆகிய இதழ்களும் இ. தி. மு.க. வுக்கு ஆதரவாக எழுதிவந்தன.

அத்தகைய ஒருகாலகட்டத்தில்தான் விழா நாயகன் தோன்றுகிறார். எழுதுகிறார் பேசுகிறார். மேடையேறுகிறார். இக்காலகட்டமே கலைஞர் கம்பளைதாசன் அவர்களையும் மலர வைத்தது.



இலங்கைக்கு வருகைதந்த தமிழக சட்டசபை உறுப்பினர்கள், இ. தி. மு. க. உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டபோது கம்பளைதாசன் அவர்கள் வரவேற்புரையாற்றுவதையும், நவஜோதி எம். ஏ. தலைமைதாங்கி இருப்பதையும் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ச்சியில் வளர்ச்சி

முத்தமிழிலும் உயர்ச்சிபெற வேண்டும் என்ற உந்திப்பால் இதற்கான வளர்ச்சிநோக்கி தனது சிந்தனையை வேரோடவிட்ட கலைஞர் கம்பளைதாசன், அழகிரி மன்றம், முத்தமிழ் மன்றம் வள்ளுவர் மன்றம், பாரதி மன்றம் ஆகியபல அமைப்புக்களை உருவாக்கி பேச்சுக்கலையை வளர்க்கும் பயிற்சி வகுப்புக்களையும் செயல்படுத்தினார். பட்டிமன்றங்கள், நாடகங்கள் கருத்தரங்குகள், விழாக்கள் போன்றவற்றில் கலந்து கொள்வதன்மூலம் தனது திறமையை மேலும் வெளிக்கொணர முன்வந்தார். ஊரு கொடவத்தை இளம் கலைஞர்மன்றம், கலைஞர் ஒன்றியம் "மாதவிகலாமன்றம்" திரு. வி. க. பள்ளி ஆகியவைகளில் புகுந்து வெளிவருகிறார்.

வளர்மதி படிப்பகம், இரவுப் பாடசாலை ஆகியவற்றை இயக்கி பொதுப்பணியாற்றுவதன் மூலம் அவரது சேவை மேலும் புகழடைகின்றது, வளர்ச்சிபெறுகின்றது. ஈழத்து நாடகத்துறையில் சிறந்த இயக்குனராக மதிக்கப்பட்ட மறைந்த தோழர் சுஹைர் ஹமீத் அவர்கள் கலைஞர் கம்பளை தாசனின் நடிப்பையும் குரல் வளத்தையும் சரியான முறையில் பயன்படுத்தி சிற்பி சிலை வடிப்பதுபோன்று ஒருதரமான நடிகனை வெளிக்கொணர்ந்தார் இப்படி தன்னை நடிப்புலகில் வெளிக்காட்டியதையிட்டு கலைஞர் இன்றும் நன்றி பாராட்டுகிறார். கலைஞரின் முதலாவது நாடகமான கடன்மவீரனை நடிக்க பயிற்சி வழங்கிய தமிழ்நாடு இராசரத்தினம்பிள்ளைக்கு கலைஞர் குருவணக்கத்தை இன்று செலுத்துகிறார்.

மீராசந்தன் என்ற ஆற்றலும் அழகும் நிறைந்த ஒரு நடிகன் தன்னோடு இணைந்திருந்த காலகட்டத்தில் தனது ஆற்றலையும், நடிப்பையும் வெளிக்காட்ட வாய்ப்பளித்து உதவிய இராஜேந்திரம் மாஸ்டர் அவர்களையும் கம்பளைதாசன் இன்று நிவு கூர்கின்றார்.

"அவளைக் கொன்றவள் நீ" . "மரண தண்டனை" "இளவரசன்" துர்கேஸ் நந்தனி" மானம் காத்த மறவன்" "தங்கப்பதக்கம்" போன்ற முப்பத்தைந்து நாடகங்கள் வரை நடித்தும், இயக்கியும் மேடைஏற்றியும் தனது கலைத்திறனை வெளிக்காட்டிய கம்பளைதாசன் இந்த நாடகங்கள் பாராட்டும், புகழும் மகிழ்ச்சியும் பெற்றுத்தந்ததுடன் கலைஞன் என்ற சேவையில் ஒரு ஆத்ம திருப்தியையும் தந்தன என்று பெருமைகொள்கிறார்.

"கடமை வீரன்" என்ற தனது முதலாவது நடகமே அடுத்தடுத்து நாடகங்களை அரங்கேற்றமுதற் படிக்கல்லாக அமைந்திருந்தது "கடமை வீரன்" தந்த புகழே நாட்ககலையை எனக்கு ஊக்குவித்தது. என்று கம்பளைதாசன் பெருமையோடு கூறுகிறார்.

கலைத்துறையோடு,. பொதுப்பணியும் கலக்கும்போது கழகத்தின் சேவையும், மக்களோடு இரண்டறக் கலக்கும் வாய்ப்பும் உருவாகியது. இத்ன்மூலம் இயற்கலையும் இனிதே வளரத் தொடங்கியது. என்றும் கரைஞர் கம்பளைதாசன் தனது வரலாற்றுப் பெருமையை உணர்கின்றார். கழகத்தின் சார்பில் நடத்தப்படும் பல் வேறு விழாக்களிலும் தனது நாவன்மையை புலப்படுத்திய கலைஞர் மேடைகளை அலங்கரிக்கும் பேச்சாளரானார்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவன்மை

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் - கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

கேட்பவரைத் தன்வயப் படுத்துவதோடு கேளாதவர்களையும் விரும்பிக் கேட்கவைப்பவர்கள்தான் பேச்சாளர்கள். இலங்கையில் சொற்பொழிவு மேடைகளில் சிம்மநடை போடும் சொல்வேந்தர்களென அந்த நாட்களில் சிலர் போற்றப்பட்டார்கள். மட்டக்களப்பு முன்னாள் பா. உ. சொல்லின் செல்வர் திரு. செ. இராசதுரை, டி. எம். பீர்முகமது, இ. தி. மு. க. பேச்சாளர் தோளர் ஏ. இளஞ்செழியன் போன்ற சிலரில் கலைஞர் கம்பளைதாசனும் சேர்க்கப்பட்டார். இவரது பேச்சின் சிறப்பு அவர்களுடன் இணைக்கக் கூடியதாக நாவில் தமிழ் தவழ்ந்தது.

"பூவுக்கு வாக்களிக்கச் சொன்ன பூநானாவின் அன்றைய தேர்தல் மேடையிலிருந்து பூபதிதாசரின் ஆன்மீகப்பந்தலூடாக புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் நினைவு நாள் மேடைகள் வரை பாராட்டுக்கள் பெற்றுக்கொண்டிருக்கும் அந்த நாவல்ல நண்பரின் தொடர் நிகழ்ச்சிகளைக் கவனித்து வந்தவர்கள் இந்த உண்மைகளை இன்று நினைவு கொள்வர் என்பதில் ஐயமில்லை.

வேலைக்காரியும், பராசக்தியும் மனோகராவும், கட்டப்பொம்மனும் சொல்லாட்சி நடத்திக் கொண்டிருந்த காலம் பின்தங்கிவிட்டபிறகு வெறும் சொல்லடுக்கிக் காட்டும் வார்த்தை ஜாலங்களையும் இன்று மக்கள் விரும்புவதில்லை. இதை அறிந்தவர்போல் கலைஞர் கம்பளைதாசன் வர்ணனைகளுக்காக வார்த்தைகளை வீணாக்காதவர். இவரின் கண்ணியமான மேடைப்பேச்சு புத்திஜீவிகள் பலராலும், விமர்சகர்களாலும் பாராட்டைப் பெற வைத்தது.

பிரபல பத்திரிகையாளரும், "நவமணி" ஆசிரியரும் கலை இலக்கிய விமர்சகருமான கே. எஸ். சிவகுமாரன் கம்பளைதாசனின் மேடைப் பேச்சுக்களை பல தடவைகளில் வெகுவாகப் பாராட்டியுள்ளதையும்,

தமிழ் நாடு சிந்தனைச்சிற்பி, சீ. பி. சிற்றரசு, முன்னாள் சென்னைமேயர்மைனர் மோசஸ், தூயமணி நடராசன், சிலம்புச் செல்வர் மா. பொ. சி. ஆகிய தமிழக பேச்சாளர்களினாலும் பாராட்டுப் பெற்றதையும் இங்குகுறிப்பிடாமல் இருக்கமுடியாது.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பம்சம்

'பொதுப்பணியாளர்கள், கலைஞர்கள் செயற்படும்போது விவேகப்போட்டிகள், வித்துவப்போட்டிகளும் எழுவதுண்டு. ஆனால் கம்பளைதாசன் அவர்களோ எந்தப் பிரச்சினையிலும் அகப்பட்டுக்கொள்ளாத பொதுமைதாசன். எல்லோரிடமும் அன்புடன் உறவு கொண்டாடும் இனிய இதயம் கொண்ட அன்புதாசன். செருக்கு - தற்பெருமை அவரிடம் கிடையாது. பகட்டுபடாடோபம், பயனற்ற தலைவணக்கம் ஆகியன இவரிடம் இல்லை. இவரது இக்குணங்கள் எல்லோரது நெருக்கத்தையும் அன்பையும் பெற்றுக் கொள்ள பேறாக இருந்தது.

இவரது இணைந்து போகும் தன்மையும், மேலான வாய்மையும், அதற்கேற்ற செயலும் எதிரிகளும் மதித்துப் போற்றும் அவரது சிறந்ததன்மைகளாகவுள்ளன.

"வாய்மை எனப்படுவது யாதெனின் - யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

மற்றவர்களுக்கு தீமை ஏற்படாத வார்த்தைகளைப் பேசுவதும், எவருக்கும் தீங்கு ஏற்படாதவாறு நடப்பதும், ஏனையோர் மனம் நோகாதவாறு நடந்துகொள்வதும் கலைஞர் கம்பளைதாசனின் சிறப்ம்சங்கள் என்று கூறுவதில் மகிழலாம்.



அகில இலங்கை தெலுங்கு காங்கிரசினால் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட கலைவிழாவில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகூரே கலைஞரின் கலைப்பணியைப் பாராட்டி சான்றிதழ் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். அமைப்பாளர் அன்பழகன் அருகில் காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பு

தனிமனித வழிபாட்டில் நம்பிக்கையில்லாதவர் எமது கம்பளைதாசன். தலைவர்களாயினும், தொண்டர்களாயினும் அவர்களது செயலையும் ஆற்றலையும் மட்டுமே கணித்து மதிப்பவர் கலைஞர்.

இவர் எனது குரு, அவர் எனது வழிகாட்டி இவர் என் தெய்வம் என்றெல்லாம் வாயால் பறைசாற்றுகின்ற காக்காய் பிடிக்கும் தனம் கம்பளைதாசனிடம் காணப்படாதவை. தனது புனை பெயரைத் தேர்ந்தெடுத்த போதுகூட தனது அறிவுக் கண்களைத் திறந்து கொள்வதற்குக் காரணமாயிருந்த, தன் கல்வியைத் தேடிடக்காரணமாயிருந்த அந்தமண்ணின் நினைவாக "கம்பளைதாசன்" என்ற புனை பெயரைத் தாங்கினார்.

அதே நேரத்தில் தனது அறிவு விருத்திக்குக் காரணமாக இருந்த அண்ணன் டிஎம்பி, தோழன் ஏ. இளஞ்செழியன் ரஹ்மானிலிருந்து, இன்றையவர்த்தகப் பிரமுகர் - வெளியீட்டாளர் வேலணை வீரசிங்கம் அவர்கள்-வரை தனது பொதுப்பணி ஈடுபாட்டுக்கும் முன்னேற்றத்துக்கும் காரணமாயிருந்தவர்களை நெஞ்சிலே நிறுத்தி அணைத்து நினைந்து மகிழ்ந்து கொண்டிருக்கும் பண்பாளர் எம் கம்பளைதாசன்.



சமாதான நீதவான் பட்டம் பெற்ற கலைஞர் கம்பளைதாசன் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் அவர்களால் வரவேற்கப்பட்டபோது எடுக்கப்பட்டபடம். இவ்வைபவத்தில் திரு. ஆர். ஆர். கே. டேலர். திரு. வேலணை வீரசிங்கம், சமாதான நீதவான் திரு. பாலசுந்தரம், ஜனாப் முகமட் ஈசாக் ஆகியோர் கலந்து கொண்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரான பாதை

எவர் எதைச் சொன்னாலும் அவற்றைக் கேட்டு சரியானதை எடுத்துக் கொள்ளும் இயற்கையான சுபாவமுடையவர் கம்பளைதாசன். எந்தத்தலைவருக்கும் பின்னாலோ, எந்த கட்சிக்குப்பின்னாலோ கண்மூடித்தனமாக போகும் தன்மையற்ற சிந்தனையாளன் தான் கம்பளைதாசன்.

சரியான ஒரு பாதையை தனக்கென அமைத்துக் கொண்டு அந்தப்பாதையிலிருந்து விலகாது நடந்து செல்பவர் அவர். இதனால் வேறு எந்தப்பாதைகளில் உள்ள கரடுமுரடுகள் இவரை எதுவுமேசெய்து விடாது. காழ்ப்பற்ற அமைதிப் பாதை,. மனித நேயப்பாதை சமதர்மப்பாதை இப்பாதையை வேறு எந்தப்பாதையில் செல்பவர்களும் பாவிக்கமுடியாது. இவரதுபாதை எவரையும் பகைக்காதது.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தம்மை இகழ்வாரையும் பொறுத்து நடைபோடும் பாதை இவரது புதுப்பாதை. அந்தநேரான பாதையிலிருந்து என்றும் வழுவாது நின்று தொடர்ந்தும் சேவைசெய்து பெருமையும் தேடிச்செல்ல கலைஞர் நடந்துசெல்வது அவரின் சிறப்பே.

மனதிலே துன்பத்தைக் கொடுக்காததும், வாழ்வுக்கு இடையூறு கொடுக்காததும் வேறுஎவருக்கும் வேதனையோ, சோதனையோ கொடுக்காததுமே கலைஞரது சீரான நேரான நடைமுறைப்பாதை. அந்த இலட்சியப்பாதையே அவரை என்றும் ஒரேமாதிரி கொண்டு செல்கிறது.



கவியேறு உமறுப் புலவர் விழாவில் கம்பளைதாசன் பேசிக்கொண்டிருப்பதையும், அமைச்சர் பி.பி. தேவராஜ், கலாநிதி அல்லாமா, எம். எம். உவைஸ், அமைச்சர் எ. எச். எம் அஸ்வர், எஸ். இசற்மசூர்மௌலானா, திலகஜோதி தம்பையா, சீதக்காதி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்

நடை முறையில் பிறர் கஷ்டங்களில் தலையிட்டுப்பகிர்ந்து கொள்வதும், தனது இன்பத்தைப்பிறருக்குப்பங்கிட்டுத் தருவதும் தான் யதார்த்தமான மானுடம் என்றால், பொய்யில்லாத அந்தப்பொது நலவாதியிடம் இந்தப்பொன்னான குணங்களைப்பலமுறை கண்டிருக்கிறேன். மனித நேயத்தின் மகத்தான சக்தியை அறிந்திருந்தவர் இவர். மனித நேயத்தால் மட்டுமே மானிலம் செழிக்குமென்றகருத்துக் கொண்டவர்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாது வேறொன்றறியாப் பெருமகன். தனிப்பட்ட முறையில் இந்த மனிதர் எவ்வளவு மென்மையானவர் இனிமையானவர் என்பதைக்குழந்தைகளும் அறிவர்.

"அம்மா கம்பளைமாமா வருகிறார் அப்பா கம்பளை மாமா வருகிறார் என்று அந்தப்பிஞ்சுகள் உற்சாகமாகக் கூவிக்குதூகலிக்கிறார்கள் என்றால், அந்தக்கும்மாளமும் குதூகலிப்பும் அவரது கரங்களில் காணப்படும் மிட்டாய்ப் பார்சல்களுக்காக அல்ல.

அந்தக்கண்களில் காணப்படும் கருணைக்காக, அந்த முகத்தில் பூத்துப்பொலியும் புன்னகைக்காக, அவரது உள்ளத்திலே நிறைந்திருக்கும் மனிதநேயத்திற்காக.

ஒருமுறை எனது மூத்த மகள் கூறினாள், கம்பளைமாமா எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்கிறாரே" என்று, "உருவத்திலா, உடையலங்காரத்திலா, உளப்பாங்கிலா, உடல் வாகிலா ? உன்று நானே கேட்டுக்கொண்ட இந்தக்கேள்விக்கு இன்னும்விடைதேடிக்கொண்டிருக்கிறேன்.



தமிழக பிரபல நகைச்சுவை நடிகர் எஸ். எஸ். சந்திரன் இலங்கைவந்தபோது கலைஞர் கம்பளைதாசனுடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காண்க. ஆரம்ப காலத்தில் எஸ். சந்திரன் இலங்கையில் இருந்தபோது கலைஞருடன் "கந்தசாமிப்பிள்ளை" என்ற நாடகத்தில் நடித்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்ததை முடித்தவர்

அக்காலத்தில் மலையகத்தில் கொடிகட்டிப் பறந்த முப்பெரும் தலைவர்களில் ஒருவரான ஏ. அஸீஸ் அவர்களைப் பற்றி நூல் ஒன்றினை வெளியிடவேண்டும் என்பது. கம்பளைதாசனின் பேச்சிலும் மூச்சிலும் நிறைந்திருந்தது. முயற்சி திருவினையாக்கும் என்பதில் நம்பிக்கை கொண்ட அவர் அந்த எண்ணத்தில் உறுதியாகச் செயற்பட்டார்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப - எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

எண்ணியபடியே செயலாற்றுவதில் உறுதியுடையவராக இருந்ததால் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைந்தார்.

அஸீஸ் பவுண்டேஷன் தலைவர் அஷ்ரப் அஸீஸ், வர்த்தகப்பிரமுகர் ஜனாப் நலன்விரும்பி வி. ஆர். எம். ஃபாரூக் ஆகியோருடன் தொடர்புகொண்டு அவர்களது உதவி ஒத்தாசையுடன் பணியைத் தொடங்கினார்.

அன்று அந்தத்தலைவருடன் தோளோடு தோள் நின்று பணியாற்றிய சொல்லின் செல்வர் பன்நூலாசிரியர் டி.எம்பீ அவர்களை ஆசிரியராகக்கொண்டு, "ஆற்றல் மிகு தலைவர் அப்துல் அஸீஸ்" என்ற நூலை வெளியிடுவதற்கு முன்னின்றுழைத்தார். முயற்சியில் வெற்றியும் பெற்றார். அவரது தூய எண்ணம் செயற்பட்டது. நினைத்ததை முடித்த மகிழ்வுடன் தலை நிமிர்ந்தார் கலைஞர் கம்பளைதாசன்



1996 யூலை மாதம் சமாதான நீதவானாக கொழும்பு உயர் நீதிமன்றில் கலைஞர் கம்பளைதாசன் சத்தியப்பிமாணம் செய்தபின், சட்டத்தரணிகள் சி. வி. விவேகானந்தன், எம். மகாலிங்கம், முத்தமிழ்மன்றத் தலைவர் ஆர். ஆர். கே. டேலர் ஜனாப். என். முகமட் ஈசாக் ஆகியோர் வரவேற்பதை படத்தில் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னா செய்யாமை

ஒருபொதுப்பணியாளனின் பயணப்பாதையிலே குறுக்கிடும் இயல்பான சோதனைகள் யாவரும் அறிந்தவையே. அடுத்துக்கெடுத்தல் குழி வெட்டுதல் முதுகில் குத்துதல் நட்டாற்றில் கைவிடுதல், ஏற்றிவிட்ட ஏணியை எட்டி உதைத்தல், தீட்டிய மரத்தில் கூர்பார்த்தல், உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்தல் ஆகிய வஞ்சகங்களில் சில வற்றை தமது பாதையிலே எதிர்கொண்டு அனுபவப்பட்டவர் நமது கம்பளைதாசன்.

1965ம் ஆண்டு ஆகஸ்ட்மாதத்தில் பண்டாரவெல நகரமண்டபத்தில் நடந்த நாடற்றவர் மறுப்புமாநாட்டுக்கான நிகழ்ச்சியொன்றில் பேசிவிட்டு ஊர்வலத்தில் கலந்துகொண்டபோது வன்முறைக்கும்பலால் அந்தஊர்வலம் குழப்பப்பட்டது அப்போது பண்டாரவளை மொஹிடீன்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த அலி ஹாஜியார் அவர்களின் பாதுகாப்பைப் பெற்று நாடகநடிகர் கிருஷ்ணனுடன் கொழும்பு வந்து சேர்ந்தார்.

மட்டக்களப்பு நகரசபைமண்டபத்தில் காலஞ்சென்ற லடிஸ் வீரமணி அவர்களின் நாடகத்தைச் சிறப்பாக நடத்திக் கொடுத்துவிட்டுத் தலைநகர் திரும்பமுயன்றபோது, ஒப்பந்தம் செய்து அழைத்துச் சென்றவர் தலை மறைவாகி விடவே உடன் சென்ற கலைஞர் கலைச்செல்வன், ஜெயகௌரி, சுப்புலட்சுமி ஆகியோருடன் மூன்று நாட்களாகப்பட்டினியோடு குரும்பைத் தண்ணீரைக்குடித்து நாட்களைப் போக்கி அந்த நபரைத்தேடிச் சந்தித்து பின் சிறுதொகை பணத்தை அவரிடம் பெற்று பசிபோக்கியவர் கலைஞர். பின் கொழும்பு வந்து சேர்ந்து அன்பர் பூபதி தாசர் அவர்கள் மூலமாக அப்போதைய பிரச்சினைகளை உடன் முடித்துக்கொண்டார்.

இதுபோன்று ஏமாற்றங்கள் மனவேதனைகள் தோல்விகள் பொய்யான அவதூறுகள் பொய்ப்பிரச்சாரங்கள் எல்லாவற்றையும் அனுபவத்தில் கண்ட கலைஞர்தான் இவர். மௌனம் கலக நாஸ்தி என்பதற்கொப்ப அவதூறுகளுக்குச் சரியான பதில் மேளனமே என்ற கருத்துக்கொண்ட அவர் எதிர்ப்பட்ட எல்லா அழுக்காறுகளையும் பொறுமையோடு தாங்கிக்கொண்டு, இன்னா செய்தாரும் நாணமடையும் வண்ணம் உடனே மறந்தும் விடுகிறார்.

பலமுறை பொறுப்பாய் வேறு
பயனில்லை யெனில் சீறு
நிலமை மிஞ்சுகையில்
பகைவனை நீறாக்கு !

என்பது புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் விருப்பு.

மன்னிக்கும் மனப்பான்மை, மறப்போம் மன்னிப்போம் என்பது கலைஞர் கம்பளைதாசனின் சிறப்பியல்பாகும்.

எனவேதான் எதிர்ப்பட்ட எல்லாத்தீமைகளையும் ஆழக்குழிவெட்டி நீளப்போட்டுப்புதைத்துமண் கொட்டி மூடிவிட்டுப் பண்பாடியவாறு போய்க்கொண்டேயிருக்கிறார் நம்கலைஞர்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமத்துவம்

இஸ்லாம்"எங்கள் வழி, இன்பத்தமிழ் எங்கள் மொழி என முழங்கிடும் ஒரு புதுமை தாசன் இந்தக் கம்பளைதாசன்.

ஆதி இறை தூதர்களின் அறஉரைகள், சோதிநபி நாயகத்தின் அருள் மொழிகள், ஆதி மகன், வள்ளுவனின் அற உரைகள், போதி மரக் கௌதமனின் சிந்தனைகள் ஆகிய அத்தனை சித்தாந்தங்களையும் உள் வாங்கிக் கொண்டு செயலாற்றுகின்ற ஒரு சர்வ சமய நேசன்.

உமறுப்புலவருக்கு விழாவெடுக்கும் அதே அக்கறையுடன் பாவேந்தரின் பிறந்த நாளுக்கு விழாவெடுப்பார். மீலாத் விழாவினை நடத்திக்காட்டிய அதே உற்சாகத்துடன் அன்னை மொழியாம் கன்னித்தமிழுக்கு அடுத்தொருநாள் விழாவெடுப்பார்.

காயிதே மில்லத் அவர்களுக்கும் அல்ஹாஜ் அப்துஸ் ஸமத் அவர்களுக்கும் வரவேற்புநிகழ்ச்சியை மன்றத்தோழர்களுடன் சேர்ந்து விழாச் சுவையுடன் நடத்திமுடித்திருப்பார், மறுநாள் ஜிந்துபிட்டி தேவஸ்தானத்திலோ, அருள் மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலிலோ நின்றுகொண்டு கீரன் அல்லது கிராமணியாரின் தமிழ்ப் பொழிவில் நனைந்து திழைத்துக்கொண்டிருப்பார்.

பாலை வனப்பேரொளியாம் பெருமானாரின் நினைவு நாளைக் கோலப்பெரு விழாவாய்க் கொண்டாடி மகிழ்ந்திருப்பார், மறுநாள் காலைப்பொழுது புலருமுன்னே பிள்ளையார் கோயில் வெளிப்பிரகாரத்தில்

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே
நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றுந் தா "

எனப்பாடிக் கொண்டிருக்கும் பக்தனைப்போல.........

கால்களை மடித்துச் சம்மணமிட்டவாறு உட்கார்ந்திருப்பார், துவங்கவிருக்கும் வாரியாரின் சொற் பொழிவைக்கேட்டு மகிழ்வதற்காக.

பல்வேறு மதம் சார்ந்த துறைசார்ந்த வர்களெல்லாம் கலைஞர் கம்பளைதாசனவர்களை நம்மவர் நல்லவர் நாடறிந்த செயல் வல்லவர் எனக்கூறிக்கொள்ளும் காரணமும் இதுவேயாகும்.

இக்குணங்களே சமத்துவ வாழ்வில் இவரை வழிநடத்திச் செல்கின்றன எனலாம்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகஒளி (நூறுல்மில்லத்)

"தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

பொதுத்துறையோ, கலைத்துறையோ தோன்றும் எத்துறையானாலும் அத்துறையில் புகழ் பெறத்தக்க முயற்சிவேண்டும் புகழும் பெருக வேண்டும். மனிதன் தோன்றினால் புகழ் பெறத்தக்க கருமங்களைச் செய்தாக வேண்டும் என்ற இலட்சிய நோக்கு நிறைந்து காணப்பட்டவர் கலைஞர் கம்பளைதாசன்.

சிறப்போடு வாழ்ந்து, சிறப்பான மனிதர்களுடன் நட்புக் கொண்டு, சிறந்த பிரமுகர்களிடம் பட்டமும் பெற்ற பெருமை இவருக்கு உண்டு.

மதியால், மானிட நேயத்தால் வள்ளலாகப் போற்றப்பட்ட முன்னாள் முஸ்லிம் கலாச்சார அமைச்சர் ஜனாப் ஏ. எச். எம் அஸ்வர் அவர்களிடமிருந்து சமூக ஒளி என்றபட்டம் பெற்றார். தேசியரீதியான கௌரவப்பட்டம் வழங்கும் நிகழ்வான வாழ்வோரை வாழ்த்துகின்ற வளமான வரிசையிலே 1994ம் ஆண்டு "நூருல்மில்லத்" என்ற பட்டம் பெற்று தனது பெயரை மேலும் உயர்த்திப் பெருமைதேடினார் கம்பளைதாசன்.



இரத்தினபுரியில் "கலைஒளி" என்றபட்டம் வழங்கும் வைபவத்திற்கு கலஞர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவதைக் காண்க. திரு. மைக்கில் ஜேபி. திரு. டி. எம். முர்ஷிதீன், திருமதி. என். யூ. எம். ஏ. காதர் ஆகியோர் உர்வத்லத்தில் செல்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதவாதி நல்ல மதவாதி

வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை முடிவடைந்ததும் பள்ளி வாசலருகே நின்று கொண்டிருப்பார் நண்பர்களைச்சந்திக்க, சந்திக்கவரும் தோழர்களுக்கு முகம் கொடுக்க.

வறுமைக்குள் சென்றுள்ள பழைய நண்பர்களைக் கண்டும் காணாதது போல, கியரை மாற்றிப் போட்டு பாதையை மாறி விலகிச் சென்றுவிடும் சில நண்பர்களுக்கு மத்தியிலே இந்தப்புனிதமான தோழமைத் தனத்தின் மாண்பு, நினைத்து நினைத்து மகிழக்கூடியதாகும். பலமணிநேரத்தை நண்பர்களைச் சந்திக்க அவர் ஒதுக்குவது தோழமையின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

எங்கோ ஒரு கிராமத்து மூலை முடுக்கிலிருக்கும் வீட்டுவாசலில் வந்து நின்றுகொண்டிருப்பார். "இவர் எங்கே இந்த நேரத்தில்' என்று ஆச்சரிய முகத்தோடு வந்து வரவேற்போம். நம் அயலிலோ, அடுத்த தெருவிலோ நடந்து முடிந்திருந்த ஒரு சோக நிகழ்ச்சியைப்பற்றி விசாரிப்பார். அந்த இடத்திற்குப் போகும் வழியைக் கூறிடக் கேட்பார்.

இப்போது அந்தக் குள்ள உருவம், நாம் கழுத்தை உயர்த்திப்பார்க்குமளவுக்கு மிக மிக உயர்ந்து நின்று கொண்டிருக்கிறது.

கட்சி வேறுபாடு கருத்து வேறுபாடு கொள்கை வேறுபாடு இருக்கலாம். ஆனால் மனித நேயத்தில் மாறுபாடோ வேறுபாடோ இல்லை என்பது அவரது நிலைப்பாடாகும்.

போட்டிக்கு பொறாமைக்கும் புழுதிவாரித் தூற்றுகின்ற வன்முறைக்கும் காரணமாகவுள்ள எந்த ஒரு சார்புக்கும் சம்பந்தமில்லாத மிதவாதி அவர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற மதவாதி.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்திடும் அன்பு! இதற்குப் பெயர்தான் கம்பளைதாசன்.




இலங்கைவந்த பிரபல தென் இந்தியப்பாடகர் திரு. ரி. எம். சௌந்தரராஜனைக் கலைஞர் சந்தித்தபோது அவரிடம் ஆசிபெறுவதைப் படத்தில் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

"முகநக நட்பது நட்பன்று - நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

முகத்தைக் கண்டு போலித்தனமாக சிரிப்பதன் மூலம் நட்பைப் பெற்றுவிடமுடியாது. உள்ளத்தால் உவந்து கொள்வதே உண்மையான நட்பாகும் என்று நட்பின் பெருமையையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுகிறது தமிழ்மறை.

மறைந்த மதிப்புக்குரிய சுயமரியாதைஇயக்க நண்பர்சீதக்காதி அவர்கள். இவர் சாவதற்கு முன்னேயும் பிறருக்குச் செய்யக்கூடிய உதவியைச் செய்து கொண்டிருந்தார்.

"ஆற்றுப் பெருக்கற்றடி சுடும் அந்நாளிலும்
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் - நல் கூர்ந்த ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து"

இல்லாத நேரத்திலும்-கூட இல்லையெனக் கூறிட இசைவில்லாத பண்பாளர். உதவிகேட்டுவந்தவர்க்கு கையில் இருப்பதைக் கொடுத்து அனுப்பிவைக்கும் பரோபகாரி. இவர் போன்றவர்களின் நட்பு கிடைத்தமைக்காக பெருமை கொள்கிறார் கலைஞர் கம்பளைதாசன்.

சிறுவயதில் கலைஞருடன் 'இளவரசன்' நாடகத்தில் உப பாத்திரம் ஏற்று நடித்த கலைஞர் கலைச்செல்வன் ஜே. பி. சிறந்த குணசித்திர நடிகர். இயக்குனர் கதாசிரியர் அவரைப்பற்றி கம்பளைதாசன் பெருமைப்படுகிறார். "ஆரம்ப காலத்திலிருந்தே சமகால நண்பராயிருந்து இணைந்து பழகி கலைத்துறையில் படிப்படியாக வளர்ந்து நிலையானதோர் இடத்தைப்பிடித்து புகழ் பெற்றிருக்கும் அவரின் வேண்டுதலுக்கமைய அவர் இயக்கி நடித்த "அண்ணாவின் சிவாஜிகண்ட இந்து ராஜ்யம்" என்ற நாடகத்தில் நீண்டகால இடைவெளிக்குப்பின் நான் நடித்தேன். அது எனக்குப் பெருமைதருகிறது' என்கிறார் கலைஞர்.

இலங்கை வானொலியின் இயக்குனர் சபையின் முன்னாள் உறுப்பினர் எச். எம். பி. முகதீன் இவரைப்பற்றி கம்பளைதாசன் குறிப்பிடுகையில் எனது நீண்டகால இலக்கிய நண்பர், என்னுடன் வேறுபட்ட கொள்கைக் கருத்துக்கள் கொண்டிருந்தாலும் மாறுபாடில்லாத நட்புணர்வுமிக்க ஒரு சிறந்த மனிதர் அந்த நட்புக் கிடைத்தற்காக மகிழ்ச்சியடைகின்றேன். என்கிறார்.

இலங்கையில் தி. மு. க. உருவாகிய காலத்திலிருந்து கலை இலக்கியத்துறையின் பிரகாசமும், முத்தமிழ் ஆர்வமும் ஒளிவீசத் தொடங்கியது இக்காலத்தில் முத்தமிழிலும் உந்தப்பட்டு அதற்காக தம்மை ஈடுபடுத்தியவர்கள் பலர் கம்பளைதாசனின் நட்பு நினைவில் இன்று நிற்கின்றனர். இவர்களில் முத்தமிழ் மன்றத்தின் இன்றையதலைவர் ஆர். ஆர். கே. டேலர் முன்நாள் சங்கம் பத்திரிகை ஆசிரியர் எம். எஸ். அருள், கே. எஸ். அபுல்ஹசன், நலன் விரும்பி வி. ஆர். எம். பாரூக். முன்னாள் கலைஞர் ரி. ஏகாம்பரம், சென்னை 'மதுராரவல்ஸ்' வி. கே. ரி. பாலன், சென்னை புதுப் பேட்டை ஹஜிகரீம் சென்னை மண்ணடி பெரியார் எம். சி. சுந்தரம், திருச்சி ஞான செபஸ்ரியன் மகரகம சீனிவாசன், சிந்தாமணி, சூடாமணி பத்திரிகைகளின் கட்டுரையாளர் அல்ஹாஷ் எல். ஐ. நாகூர்கனி கலைவாதி கலீல். ஆகியோர் நினைவில் நிற்கின்றனர் என்கிறார் கலைஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசும் பாராட்டுகளும்

தோழர் ஆர். ஆர். கே. டேலர் அவர்களால் இயக்கி மேடையேற்றப்பட்ட விளக்கேற்றிவைத்தவள் நாடகத்தின்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மூதூர் மஜீத் அவர்கள் தம்மைப்பாராட்டி கௌரவித்ததையும்.

மருதூர் ஹஸன் அவர்களால் நடத்தப்பட்ட டவர் மண்டபத்துவிழாவில் முன்னாள் ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி தமக்குப்பரிசும் பாராட்டும் வழங்கியதையும்

தெலுங்கு காங்கிரசைச்சேர்ந்த அன்பழகன் அவர்களின் ஏற்பாட்டில் சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற விழாவில் முன்னாள் மாண்புமிகு அமைச்சர் சிரிசேன குரே அவர்கள் தம்மைப்பாராட்டிக் கௌரவித்ததையும்.....

வை. எம் .பி. ஏ. மண்டபத்தில் "இளவரசன்" நாடகம் மேடைபேறியபோது தலைமை வகித்த அன்றைய குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டதிகாரி கணேஷராஜா நாடகம் முடிந்த பின்பும் நீண்ட நேரம் காத்திருந்து "புத்தபிக்கு" ஆக வேடகம் போட்டு நடித்த தம்மைத்தனியாகச்சந்தித்து வெகுவாகப்பாராட்டிப்புகழ்ந்துரைத்ததையும்........

இஸ்லாத்தைப்பற்றிப் பெரியார் ஈ. வெ. ரா வும் அறிஞர் அண்ணாவும் கலைஞர் கருணாநிதியும் மேடையில் பேசிய ஒலி நாடாவை மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் ஜனாப் மருதூர் மஜீத். சிவகுருநாதன், கவிஞர் ஷரீப் ஆகியோர் முன்னிலையில் வெளியிட்டுப்பாராட்டுப் பெற்றதையும்.........

நேரு கொத்தலாவெல ஒப்பந்தத்தின் கீழ் "55 வயது வரை விஸா" என்ற திட்டத்தை மாற்றி ஆயுட் காலம் வரை தங்குவதென்ற ஒரு கௌரவமான அந்தஸ்தைப்பெறுவதற்கான ஒரு போராட்டத்தில் சுப்பராமன் வி. வரதராஜ் அதிசயபோர்த்தி எஸ். பூபாலன், எம். நடராசா சிவானந்தன், சுப்ரமணியன் உட்பட சுமார் முன்னூறு பேர் கொண்ட இந்தியபதிவுப் பிரசைகள் சங்கம் என்ற அமைப்பின் மூலம் தீவிரமாகப் போராடி சங்கத்தின் கோரிக்கையை பெற்றுக்கொள்வதன் மூலம் அந்த அமைப்பின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார் கம்பளைதாசன்.

1996-9-15ல் இரத்தினபுரி அகில இன நல்லுறவு ஒன்றியம் நடாத்திய சாமஸ்ரீ மூன்றாமாண்டு பட்டமளிப்பு விழாவுக்கு நுகவெல ஹுசைன், சமூகஜோதி எம் ஏ. ரபீக் அவர்களால் அழைக்கப்பட்டு "கலைஒளி" என்ற பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதை கலைஞர் கம்பளைதாசன் நன்றியுணர்வுடன் நினைவு கொள்கிறார்.

காயிதேமில்லத் நூற்றாண்டு விழாக்குழுவின் தலைவராக இருந்து கயிதேமில்லத் நூற்றாண்டு மலரை சிறப்பாக வெளியிட்டதை தினகரன் 4-8-96 இதழில் பத்திரிகையாளர் எம். எம். பைரூஸ் பாராட்டி கட்டுரை எழுதியுள்ளதையும் கலைஞர் கம்பளைதாசன் இச்சந்தர்ப்பத்தில் மகிழ்வுடன் நினைவு கொள்கின்றார்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசக்கரங்கள்

பத்திரிகை வானொலி தொலைக்காட்சி போன்ற தொலைத்தொடர்பு சாதனங்களின் மூலம் தமக்குக்கிடைத்த ஒத்தாசை உதவிகளையும், இதனால் தனக்குக் கிடைத்த மதிப்பையும் உற்சாகத்தையும் பற்றி கலைஞர் கம்பளைதாசன் இன்று நினைவு கூறுகின்றார்.

அன்றைய தட்டாரத்தெரு பட்டறைகள் மலிந்திருந்த வீதி, எங்களுக்கும் தெரிந்ததெல்லாம் ஒரே ஒரு பட்டறைதான். மதிப்புக்குரிய ஒருமாமனிதரின் ஆளுமையின் கீழ் இருந்த பயிற்சிப்பட்டறை. அதுதான் அன்றைய "சுதந்திரன்" காரியாலயம்.

தமிழரசுத் தந்தையாராலும், தளபதியராலும், சொல்லின் செல்வராலும், புரட்சிக் கவிஞராலும் எழுச்சி கொண்டிருந்தகாலம். அந்தப்பாசறையில் எஸ். டி. எஸ் அவர்களின் தத்துப்பிள்ளைகளாக நாங்கள் உலாவித் திரிந்தநேரம். சிற்றேடுகள் பலவும் அந்தக் குருகுலத்திலேயே அச்சாகிக் கொண்டிருந்தகாலம் அது.

எல்லோரையும் போலவே கலைஞர் கம்பளைதாசனும் அந்தக் காலத்தை இன்று நினைவு கொள்கின்றார். எஸ். டி. சிவநாயகம் அவர்கள் தமக்குப் புரிந்த பேருதவிகளை எண்ணிப்பார்க்கிறார். நன்றி உணர்வோடு இன்று உள்ளம்பூரிக்கிறார்.

எஃப். எம். 99 நிகழ்ச்சிப் பணிப்பாளர் தில்லைநாதன், உள்ளத்தாலும் கனம் நிறைந்தவர். கனம்பண்ணத் தகுதியான மனிதாபிமானி - கலைஞர்களை மதிக்கும் பண்புமிக்க கலாபிமானி. இவரது ஒத்துழைப்பும், ஆதரவும், அபிமானமும் தமக்கு பேருதவியாக இருந்ததாக கலைஞர் கம்பளைதாசன் பெருமதிப்போடு கூறகிறார். "முத்தமிட்டு ஆராதிக்கவேண்டிய நேசக்கரங்கள் அவை" என்றும் பாசத்துடன் கூறுகிறார் கலைஞர்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடைமை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

நன்றிகொன்றவராக இல்லாது நன்றிமறவாதவராகவே கம்பளை தாசன் தன்னை ஆக்கிக்கொண்டு வளர்ந்தவர் நன்றிமறப்பது நன்றல்ல என்பதை நன்றே அறிந்து நடந்தவர் அவர். பொதுப்பணியிலும் கலைத்துறையிலும் ஈடுபடக்காரணமாயிருந்த முதல் நாடகமான "கடமைவீரன்" நாடகத்தின் மூலம் மக்கள் மத்தியில் நல்லதோர் வரவேற்பு, பாராட்டு வளர்ந்து வந்ததைப் பெருமையுடனும் நன்றியுடனும் எடுத்துக்காட்டுகின்ற கம்பளைதாசன் "விளக்கேற்றி வைத்தவள்" "கந்தசாமிப்பிள்ளை" "ஏன் அழுதாய்" "இளவரசன்" ஆகிய நாடகங்களின் மூலம் தனக்குக் கிடைத்த பெரும் புகழும் நாடகத்துறையில் மேன்மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியது என்பதை மனமகிழ்ச்சியோடு இன்று கூறுகின்றார்.

தம்மோடு ஒத்துளைத்த அன்றைய நடிகையர் சகோதரிகளான மணிமேகலை, ஹெலன்குமாரி, ஜெயகௌளரி, மல்லிகா, ராஜம், முத்துலட்சுமி - சுப்புலட்சுமி ராஜாமணி, ஜெயந்தி ஆகியோரை அன்புடனும் நன்றியுடனும் இன்று நினைவு கூறுகின்றார்.

ஜனாதிபதி பரிசுபெற்ற நடிகமணி கே. ஏ. ஜவாஹரின் "ஆபூ நானா", டி.வி. நாடகத்தில் திரு. விஜயராஜா ஜே.பி., எம். பி. ஹுசைன்பாரூக், கே. எம். எம். நஸீர் ஆகியோருடன் தாமும் சேர்ந்து நடிப்பதற்கு உதவிசெய்த எல்லோருக்கும் தமது மனப்பூர்வமான நன்றியை நினைவுகொள்கிறார்.

பல்வேறு சமயங்களில் தமக்குப்பேருதவியாக விருந்த கணபதிவித்தியாலய அதிபர் ஆ. தில்லைநாதன் ஜே.பி. தமிழ் இளைஞர் கலாச்சாரக்கூட்டமைப்பைச் சேர்ந்த எம். கனகராஜா, சித்திரசேனன் ஜே.பி., இரத்தினம், திருக்கேஸ்வரன் செல்லச்சாமி ஜே.பி. தொண்டா நற்பணிமன்றத்தைச் சேர்ந்த தோழர் கரு. பத்மநாதன் ஆகியோரை நன்றியுடன் நினைவுகொள்கின்றார் கலைஞர்.

முதிய பத்திரிகையாளரும் முன்னாள் தினகரன் ஆசிரியரும் சட்டத்தரணியுமான திரு. ஆர். சிவகுருநாதன், விரகேசரி செய்தி ஆசிரியர் திரு. டேவிட்ராஜ் தற்போதைய பதில் ஆசிரியர் திரு. நடராசா ஆகியோரின் அரவணைப்பும் உதவியும் என்றும் மறக்கமுடியாதவையாகும் என்று கலைஞர் நன்றியுணர்வோடு நினைவு படுத்துகிறார்.

முன்னர் தினகரனில் எழுத்தாளராக பணியாற்றிய மட்டுநகர் மேயர் திரு. செழியன் பேரின்பநாயகம், முன்னாள் இலங்கைவானொலி புகழ் சகோதரிகள் நிஹாராஷபூர்தீன், ஆமினாபேகம் ஆகியோர்தமக்குப் புரிந்த பேருதவிகளை நன்றியுடன் நினைவு கொள்கிறார் கம்பளைதாசன்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல்

அன்புக்கும் மதிப்புக்குமுரியவராக கலைஞர்கள் மத்தியில் திகழ்ந்த காலஞ்சென்ற கவிஞர் சில்லையூர் செல்வராஜன் கம்பளைதாசன் எழுதிய "வீட்டுக்கோர் வேலைக்காரி" என்ற நாடகத்தைப் பார்த்து விட்டு வெகுவாகப் பாராட்டியிருந்தார்.

"அ. ந. கந்தசாமி அவர்களின் "மதமாற்றம்" என்ற நாடகத்தைப் பார்த்து ரசித்து நீண்டகாலத்திற்குப்பிறகு இப்படி ஒரு சிறந்த நாடகத்தை இன்றுபார்த்தேன்" என்று சில்லையூர்அவர்கள் கம்பளைதாசனின் நாடகத்திறமையை வியந்து பாராட்டியிருந்தார்.

கலைத்துறையில் எல்லையில்லாப் புகழ்பெற்றுவிளங்கிய சில்லையூர் செல்லராஜன் அவர்கள், சாதாரண ஒரு கலைஞனாக வளர்ந்து வந்த கம்பளைதாசனை அழகாகப்பாராட்டி அற்புதமாக வியந்தாரென்றால், வளரும் கலைஞனை தன் பாராட்டின் மூலம் நீர்வார்த்தார் என்றால் அது கலைஞரின் வளர்ச்சிக்கு அவர் கொடுத்த ஆசீர்வாதமேயாகும்.

முதன்முதலில் இலங்கையில் எம். ஜி. ஆர். மன்றம் 1957ம் ஆண்டு தலைநகர் கொழும்பு வாழைத்தோட்டம் சென் செபஸ்தியான் பகுதியில் கம்பளைதாசன் அவர்களால் அமைக்கப்பட்டதும், அன்றைய கொழும்பு நகர துணைமேயர் பியதாச பெரேரா அவர்களால் மன்றம் திறந்துவைக்கப்பட்டதும், தொழிலதிபர் திரு. கனகராசா அவர்களால் மன்றத்துக்கான தளபாடங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டதும், இதையடுத்து மன்றம் படிப்படியாக வளர்ச்சிகண்டு வந்ததும் இப்பகுதிமக்கள் அறிந்த உண்மையாகும்.

இலங்கைவந்த மக்கள் திலகம் எம். ஜி. ஆர் அவர்கள் கம்பளை தாசனின் எம். ஜி. ஆர். மன்ற அழைப்பையும் ஏற்று கோல்பேஸ் கோட்டலின் வரவேற்பு மண்டபத்தில் இலங்கை வானொலி புகழ் திரு. மயில்வாகனம், திரு. இரா பத்நாதன் ஆகியோர் வரவேற்கக் காத்திருந்தபோதும், ஆர். எம். வீரப்பன். கே. கே. சாமி ஆகியோருடன் அங்கு வந்திறங்கிய எம். ஜி. ஆர். அவர்கள் கரங்களைக் கூப்பியவாறு கலைஞரின் மன்றத்தினுள் சென்று கலந்துரையாடிய அந்த நாளை அன்றைய கலைஞர்கள் அனைவரும் அறிவர். இது கலைஞரின் மறக்க முடியாத நிகழ்ச்சிகளில் ஒன்றெனலாம்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரவலர் நட்பு

ஒப்புரவு என்னும் கொடைத் தன்மையும் நற்பண்பும் உள்ளவர்களிடம் செல்வம் சேர்ந்திருப்பது ஊர் நடுவே ஒரு பழுத்தமரம் இருப்பது போலவும், ஊரார் குடிப்பதற்கான நீர் நிறை நற்குளம் ஒன்று இரப்பது போன்றதுமாகுமென்பது வள்ளுவர் கூற்று. அத்தகைய பல புரவலர்களின் நட்பைப் பெற்றிருப்பவர் நமது கம்பளைதாசன் அவர்கள்.

கலை இலக்கிய வெளியீடுகளுக்கு முன்னோடியாகத் திகழும் வர்த்தகப்பிரமுகர் வேலணை வீரசிங்கம் அவர்கள் வேகமும் விவேகமும் மிக்க நல்ல தொரு சீர்திருத்தவாதி. நாமும்தான் சீர் திருத்தம் பேசுகிறோம் சில நேரங்களில் நம்மால் சில எல்லை தாண்டிப்போகமுடிவதில்லை.

காலனைக்கண்ட போதும் கொள்கை தனைப்பேசி நிற்பவர் நமது வேலணை. எடுத்ததை முடித்துக்காட்டும் அசைக்க முடியாத மன உறுதி கொண்டவர் அவர்.

பொதுப்பணியாளர்களக்கு உதவுவதும், கலைஞர்களை அடையாளம் கண்டு பாராட்டுவதும் இந்த நல்லிதயங் கொண்டவரின் எழிலான குறிக்கோள். நமது கம்பளை தாசன் அவர்களின் கலைவளர்ச்சிக்கும், பொதுப்பணிக்கான உற்சாகத்திற்கும் உரமிட்டு வளர்த்தவர் வேலணை வீரசிங்கம் அவர்கள். இவர் போன்றவர்களை கலையுலகம் என்றும் மதிக்கும், போற்றும்.

எண்ணிப்பார்க்க முடியாதளவுக்கு நிகழ்ச்சிகளையும், விழாக்களையும் கண்ணை மூடித் திறப்பதற்குள்ளாகப் பிரமாண்டமாக நடத்திக் கொண்டிருக்கிறாரே இந்தக் கம்பளை தாசன் எப்படி முடிகிறது அவரால் ? என்றொரு வினாவோடு முனுமுனுத்துக் கொள்கிறார்கள் சிலர். ஆனால் புரவலர் நட்பு அவருக்கு கை கொடுத்து நிற்கின்றதே, அது அவரது வலிமை கலைஞர் கம்பளை தாசனிடம் நான் மூன்று விதமான தன்மைகளைக் கண்டிருக்கிறேன். ஒன்று - எதையும் செய்துமுடிக்கவேண்டுமென்ற ஊக்கமுடமை.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் - அசைவிலா
ஊக்கம் முடையா னுழை"

ஊக்கமும் திறமையும் உள்ளவனிடம் ஆக்கம் என்பது தேடிப்போகுமாம். இரண்டு - "பெரியாரைத் துணை கொள அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்" பெரியாரைப் போற்றித் தமக்குச் சொந்த மாக்கிக் கொள்வது பெறற்கரிய பேறுகளில் தலை சிறந்த தாகும். அந்தப் பேற்றைத்தமதாகக் கொண்டிருப்பவர் கம்பளைதாசன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று - ஒப்புரவாளர் நட்பும் பழக்கமும். "ஊருணி நீர்நிறைந்தற்றே - உலகவாம் பேரறி வாளன் திரு" உலகு வாழநினைத்திடும் வள்ளல்களான பேரறிவாளர்களின் தொடர்பைப் பெற்றிருப்பவர் இவர்.

இந்த முப்பெரும் பண்புகளால் வெற்றிநடை போட்டுக்கொண்டிருப்பதே இவரின் சிறப்பு. அயராது உழைத்திடும் ஊக்கமுடைமை திருவினையாக்கும் தீவிர முயற்சி, அருமையான தோழமைத்தனம், பெரியார்களான சான்றோர்களின் ஆதரவு, போற்றுதலுக்குரிய புரவலர்களின் தாராளமான நல்லுதவி இத்தனையும் ஒன்றுசேரப்பெற்றுள்ள செயல்வீரரான இவரிடமிருந்து வெற்றியைத்தவிர வேறெதைத்தான் எதிர்பார்க்க முடியும் ?

அருள் மிகு பூபால வினாயகர் கோயில் அறங்காவலர் டாக்டர் செந்தில்வேல் அவர்கள். அறங்காப்பவர்மட்டுமல்ல. ஆதரித்து மகிழ்விக்க வேண்டிய கலைஞர்தம் திறங்காப்பவரும் கூட. அறப்பணியைப் போலவே பொதுப்பணியையும் போற்றிப்பாது காத்திடும் தியாக சீலர் அவர்.

வாணி விலாஸ் உரிமையாளர் எஸ். சுப்பராமன் அவர்கள். அப்போதும் இப்போதும் எப்போதும் எமக்கினியவர் எங்கட்குரியவர். அமைதியே உருவான பரோபகாரி. உயர்விலும் பணிவு காட்டும் பெருந்தகை. தலையில் கனமில்லாதவர். கனம் பண்ணத்தகுதியுள்ள எல்லாத்தகைமைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும் கனவான். ஆதாம்பாவா அன்சன்ஸ் உரிமையாளர் என். எம். இஸ்ஹாக் அவர்கள் கலைஞரது கலை இலக்கியப் பணிகளுக்கு ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறுவகையில் ஆதரவும் உதவிகளும் நல்கி எந்தவித ஏற்றத்தாழ்வும் இல்லாது சகோதர உணர்வுடன் இருந்துவருவதை கம்பளைதாசன் இன்று பெருமையுடன் நினைவு கொள்கிறார்.

கொழும்பு விஜயா அச்சக உரிமையாளர் என். சந்திரசேகரன் பி. எஸ். சி. அவர்கள் கலை இலக்கிய மன்றங்களுக்கு உதவி நல்கும் நோக்குடன் செயலாற்றி வரும் கலை ஆர்வம்மிக்க ஒரு நண்பர். இவருடைய நட்பும் கலை வளர்ச்சிக்கு பெரும் துணையாக நின்றது என்பது கலைஞரது கூற்று.

முத்து மீனாட்சிவேலு, கோல்டன் கபே உரிமையாளர் ராமன், நியூ கணேசன் பிறின்டஸ் கே. கனகசிங்கம் போன்ற நல்ல பண்புள்ளம் கொண்டவர்கள் பலர். ஊழியர்களுக்கு உதவுவது மட்டுமல்ல ஊருக்கு உழைக்கும் உத்தமப் பொதுப்பணியாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் , தியாகிகளுக்கும் கைகொடுத்துதவி திருப்தியடைபவர்கள் இப்புரவலர்கள்.

அன்பான இதயங்கொண்ட இனியராஜா தொழிலதிபர் கனகராஜா அவர்கள். எஸ். வி. பி. டிரேடிங் கம்பனி உரிமையாளர்கள் அதிசய போர்த்தி, வரதராஜா அவர்கள்.

ஓவசீஸ் ஓட்டோ மொட்டீவ் அதிபர் கே. எஸ். பி. செல்வராஜா அவர்கள். ஸ்ரீ மைதிலி ஜுவலர்ஸ் உரிமையாளர் பழனிராஜா. ரெனாஸ் டயர் கம்பெனி உரிமையாளர் ரெங்கராஜ் ஜே. பி. சிலோன் கொமர் ஷியல் கம்பெனி உரிமையாளர் தங்கராஜ் ஆகியஇந்த ராஜாக்களெல்லாம் உள்ளத்தாலும் எண்ணத்தாலும் செயலாலும் உயர்ந்த ராஜாக்களாகும்.

கருணை கொண்ட உள்ளமும் மலர்ந்த முகமுமாய் கலைஞர்களையும் பொதுப்பணியாளர்களையும் வரவேற்றுப் பேசிடும் வள்ளல்களுமுண்டு. டிரேட்ஸ் லங்கா திரட் உதிமையாளர் ஜனாப் எம். எச். ரஹ்மத்துல்லாஹ். செம்பியன் திரட் உரிமையாளர் ஜனாப் ஹஸன் ஹாஜியார் செய்யது பீடிக்கம் பனிப்பணிப்பாளர் டொலர் ஹாஜியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாளர்கள் ஆரணி தியாகலிங்கம், ஜே. பி. ஜெயராம், ஜே.பி. பாலசுந்தரம். ஜே. பி. முஹம்மது கம்பெனி உரிமையாளர் ஷங்கர். எஸ். பி. எஸ். உரிமையாளர் கருப்பையா பிள்ளை ஜே. பி. ஆகியோர் கைம்மாறு விரும்பாத மழை போன்று 'குறள்' வழிநிற்பவர்கள்.

முஸ்லிம்களைப்பொறுத்தவரை தீன் வழியோடு சொந்த முள்ளவர்கள் மட்டுமல்ல தேன் மொழியோடு பந்தமுள்ளவர்களும் கூட. தேன்மணக்கும் தமிழ்வளர நாமணக்கப்பாடல் தந்த பாமணக்கும் புலவர் கூட்டம். இஸ்லாத்தில் ஏராளம் ஏராளம்.

சங்கப்புலவர்களுக் கீடான சாகிப்புலவர்களை யாரே மறுத்திட முடியும் ?

இந்த வரலாற்றுண்மையைப்புரிந்து கொண்டுள்ள வர்த்தகத்துறை வள்ளல்களும் நம்மிடையே நிறைய உண்டு.

பணத்தை அள்ளித்தருவதுமட்டும் வள்ளல்த் தன்மையல்ல. நல்ல குணத்தைக்கண்டு பாராட்டுவதும் வள்ளல்த் தன்மை தான். இந்த நல்ல தன்மைகளை ஒருசேரப்பெற்றிருப்பவர்தான் இண்டர் நெஷனல் டயர்கம்பெனி பிரைவேட் லிமிட்டட் உரிமையாளர் திரு. ஆர். விஜயபாலன். பி. கொம். அவர்கள்.

கைமாறு கருதாக் கடப்பாடுடைய இந்த வள்ளல்கள் வாழ்கவென வாழ்த்துகிறார் கலைஞர் அல்ஹாஷ் அஸ்ரவ்ஹுசைன் ஜே. பி. , பிளவுஸ்ஹோட்டல் உரிமையாளர். ஏ. சி. எம். அக்பர் அலித், தொழிலதிபர் ஜி. நாராயணசாமி போன்றோர் கலைஞரை நேசிக்கும் கலை உள்ளம் நிறைந்தவர்கள்.



கொழும்பு மேயராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. கே. கணேசலிங்கம் அவர்களுக்கு கொழும்பில் திருச்செல்வம் பொதுப்பணி மன்றம் திரு. பா. பாலசுந்தரம் தலைமையில் நடத்திய வரவேற்பு விழாவில் கலைஞர் பேசிக்கொண்டிருப்பதைப் படத்தில் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமை

தோழமை என்ற வார்த்தைக்கே தனி அந்தஸ்தைக் கொடுத்தவர்களில் நமது கம்பளை தாசனும் ஒருவர். தோழமையை ஆராதிப்பதில் தாராளமனம் கொண்டவர். இதனால் ஏராளமான நண்பர்களை தன்னகத்தே கொண்டிருந்தார்.

இழமைக்காலத்திலிருந்தே தோழமை எண்ணத்தோடு பின்னிக்கிடக்கும் இனிய நண்பர் சிக்கந்தர், இனிய குணமும், இளகிய மனமும் கொண்ட எஸ். எம். எஸ். செய்யத்முஹம்மத், இரட்டையர்களில் ஒருவரான இனியநண்பர் அருணாசலம், எக்கணமும் மறக்கவொண்ணா நெய்னார், அன்பு நண்பர் சர்தார், சிரித்துப் பழகிப் பிரிந்து சென்று இன்று தமிழகத்தைச் சிரிக்கவைக்கும் எஸ். எஸ். சந்திரன், ஏ. கிதார், இ. தி. மு. க. அலைவீசியகாலத்தில் திரைக்கலையில் மணம் விசிய தோழர் மணவைத்தம்பி, புகைப்படப்பிடிப்பாளரும் - பத்திரிகையாளருமான திரு. கிங்ஸ்லி செல்லையா, ஜே. பி., குறைவற்ற நிறையுள்ளம் கொண்ட தென்னரசு, அன்பையும் பாசத்தையும் அள்ளித்தரும் கலைஞர் ஆர். ராஜசேகரன், ஆதரவு நிறைந்த எம். எஸ் சாம்பசிவம், சமகால நண்பர்களான புகழ் பூத்த புகைப்படப்பிடிப்பாளர் கொட்டாரமுல்லை பாரூக், பீ. எம். ஸலாகுதீன் நேசக்கரம் நீட்டும் இயக்குனர் ஜனாப் ஏசி. எம். ஹுஸைன் பாரூக்,கலைத்துறைத் தோழர்கள் மில்டன், எஸ். பி. பாண்டியன், அன்பு கலைதாசன், அண்ணாதாசன், தாஜீத்தீன், அழகேசன், ஞானம் முத்தமிழ் வளர்த்த எஸ். சிவானந்தன் சுப்பிரமணியம், மரைக்கார் ராமதாஸ், கலைஞர் கதிர்காமத்தம்பி நடிகர்களான எம். எம் ஏ. லத்தீப், ஜோபு நஸீர், இஸ்லாமிய பேரவையைச் சேர்ந்த கவிஞர் ஷரீப், எஸ். எச். எம். ரிஸ்வி, சமூகஜோதி, எம். ஏ. றபீக் நமது நாட்டின் வளத்திற்காக பணியாற்றும் வானொலிபுகள் நண்பர் எம். எச். எம். பவ்ஸில் அமிர் இன்னும் இனிய நண்பராக இருந்து வரும் ஜே. பி. றோபட், கொழும்பு கலைச்சங்கத்தலைவர் திரு. கே. பாலச்சந்திரன் - உட்பட இன்னும் பல்வேறு சேவை நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும் ஒத்துளைப்புகள் வழங்கிய இனிய நண்பர்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் கலைஞர் கம்பளைதாசன் நினைவு படுத்துகின்றார். இந்த நன்றிமறவா தோழமை உணர்வுகளை நினைவு கூறும் இடமும் பொருத்தமானதே.



இலங்கைக்கு வருகைதந்த சென்னை மேயர்-மைனர்மோசஸ் கொழும்பில் வரவேற்கப்பட்டபோது கலைஞர் கம்பளைதாசன், ஏ.சிக்கந்தர், இரா அதிமணி, எஸ். பத்மநாதன், கலைச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சாரப் பணிகள்

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களின் ஆஸ்தான தமிழ் பேச்சாளர்கள் ஷேக்கரும், ஸ்ரீவைகுண்டம் ஷேக்முஹம்மதும் தம்முடன் மேடைகளுக்கு அழைத்துச் செல்லும்போது கம்பளைதாசன் அவர்களே தனது நாவன்மையை வியந்து ஆச்சரியப்படதும் உண்டு. அன்றைய காலத்தில் மாநகர தேர்தல் மேடைகளில் கலைஞர் முழங்கத்தொடங்கினார். அவர் உள்ளத்தில் இருந்த மக்கள் தேவைகளை அம்பலத்திற்குகொணர அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

முன்னாள் லங்கா சமசமாஜக் கட்சியின் பிரமுகரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரி அவர்களது தேர்தல் பிரச்சார மேடைகள், முன்னாள் செனட்டர் ஜனாப் மசூர் மௌலானாவின் தேர்தல் மேடைகள் போன்றவற்றில் கலைஞரின் பேச்சு நட்பின் சிறப்புக்கு அவர் கைக்கொண்ட முறைகளை எடுத்துக்காட்டுகின்றன.

அண்மையில் நடந்த வி.பி. கணேசனின் இரங்கற் கூட்டத்தில் கலைஞர் ஆற்றிய உரை இன்றும் இதயத்தைத் தொட்டுநிற்கின்றன.

கலைஞர் கம்பளைதாசன் ஏறிஇறங்கிய மேடைகள், கலந்துகொண்ட கூட்டங்கள், கருத்தரங்குகள், ஏனைய நிகழ்ச்சிகள், நடத்திய இலக்கியவிழாக்கள், பட்டிமன்றங்கள் பற்பல, ஏழைச்சிறார்களுக்குதவிய இலவச இரவுப்பாடசாலைகள், இணைந்து நடத்திய நூல்வெளியீடுகள், முன்நின்று நடத்திய இரங்கற் கூட்டங்கள், பரிசளிப்பு விழாக்கள், தமிழ் விழாக்கள், இ. தி. மு. க. பிரச்சாரங்கள், இறவாப் புகழ்தரும் உதவி நிதிய செயற்திட்டங்கள். இப்படி மக்களுடன் இணைந்த பல்வேறு பணிகள் என்றும் அழியா நினைவில் நின்றுகொண்டிருக்கின்றன. இவற்றை நினைத்து வியந்து போற்றி மகிழ்கிறோம்.

பொதுப்பணி மேடைகளிலும், அரசியல்வாதிகளின் மேடைகளிலும் பேசுவதற்கு கலைஞர் அழைக்கப்படுவது அரவது தமிழும் கருத்தும் எவ்வளவு சிறப்புடையன என்பதை எடுத்துக்காட்டுபவைகளாக உள்ளன. எந்த அரசியல் சார்புமில்லாத கலைஞரது பேச்சு சகல அரசியல்வாதிகளையும் விரும்பவைத்து விடுவது இயல்பு. நட்புக்கும், மனிதநேயத்திற்கும் அவரது பேச்சில் முதலிடமிருப்பதே சகலரும் விரும்பி அழைப்பதற்கான காரணியாகும்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்புகள்

பல்வேறு காலங்களில் பல்வேறு பிரமுகர்களைச் சந்தித்து உரையாடியதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது இன்னொரு இனிமையான நண்பரைச் சந்தித்தாகக் கூறினார். பொதுவாக இனியநண்பர் என்று கூறுவதுதான் அவரது வழக்கமான பேச்சு.

சமகாலத்து நண்பர்கள் இருவர் அதாவது இழமைக் காலநண்பர்கள், ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே ஒரவரை ஒருவர் சந்தித்தவர்கள் ஒருவரின் கையில் கல்கண்டுவார இதழ் இருக்கும் மற்றவரின் கையில் முத்தாரம் வாரஇதழ் இருக்கும் திடீரென இன்று காலை அவர்கள் இருவரும் இருபத்தைந்து ஆண்டின் பின் சந்திக்கின்றனர். அவர் கையில் அதே கற்கண்டு இவர்கையில் அதே முத்தாரம் "முத்தாரம்" கொஞ்சம் சத்தான விசயம் "கல்கண்டு" இனிமையான சங்கதி இதனாலேதான் இனியநண்பர் என்றாறோ என்று பட்டது.

கல்கண்டு வைத்திருந்தவர்தான் பிரபல பத்திரிகையாளரும் நூலாசிரியருமான மாணாமக்கீன். முத்தாரம் வைத்திருந்தவர்தான் நம் கலைஞர் கம்பளைதாசன். இந்த அவசரமான யுகத்தில் பொருத்தமாக லைட் றீடிங்கை அறிமுகப்படுத்தி என்னைப்போல் ஓய்ந்திருப்பவர்களுக்கும் கூட மேலோட்டமாக மேய்ந்து கொள்வதற்கும் லைட் றீடிங்கை அறிமுகப்படுத்தியவர் ஒருவகையில் இனிமையானவர்தான் அந்த இனிய சந்திப்புக்கு வாழ்த்துக்கள்.

முன்பின்னாக தான் சந்தித்தவர்களைப்பற்றி கலைஞர் கம்பளைதாசன் நினைவு கூருகிறார் திராவிடக் கழக கி. வீரமணி நடிகர் திலகம் சிவாஜி கணேசன், தத்துவ எழுத்தாளர் . டி. கே. சீனிவாசன், சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு, தவத்திரு குன்றக்குடி அடிகளார், நாஞ்சில்மனோகரன் பிரபல பின்னணிப்பாடகர் டி. எம். சௌவுந்தரராஜன், எம். எம் . பீர் முஹம்மது, எஸ். எஸ். சந்திரன், இசைமுரசு நாகூர் இ. எம் ஹனிபா, சிலம்பொலி செல்லப்பா, பேராசிரியர் நவநீதன் தம்பதிகள், புகழேந்தி எஸ். எஸ். மாரிசாமி, என். கணபதி இந்தியப்பிரதமராகவிருந்த வாஜ்பாய் இந்தியமுன்னாள் எம்பி. கே. ரி. கோசல்ராம், மறைந்த விஜயகுமாரணதுங்க, ரி. என். அனந்தநாயகி, மாண்புமிகு ஜனாதிபதி திருமதி, சந்திரிக்கா பண்டாரநாயக்க, கவிஞர்கண்ணதாசன் ஆகிய பல்வேறு பட்ட துறையினரை பல்வேறுபட்ட சந்திப்புக்களின்போது கண்டு பேசியும், கலந்துரையாடியும் இருந்த காலங்களையும் சம்பவங்களையும் இன்று நினைவுகூருகிறார் கலைஞர் கம்பளைதாசன். ஏ. எம். ஏ. அசீஸ், சேர். ராஜீக்பரீத். டாக்டர். எம். சி. எம். கலீல் ஆகியதலைவர்கள் மறைந்தாலும் நினைவில் நிறைந்தவர்கள் என்கிறார் கலைஞர்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீலாத் விழாக்கள்

கல் ஒலுவ மீலாத் விழாவில் கலந்து கொண்டு பேசியது..
அக்பர் லேன் - மீலாத் விழாவில் கலந்துகொண்டு பேசியது..
எம். எஸ். எம். ஹம்ஷா ஜே. பி. ஏற்பாட்டில் திகாரிய கல் குழி ஸியாரத்தடியில் முற்போக்கு எழுத்தாளர் மு. பஷீர் அவர்கள் தலைமையில் நடந்த மீலாத் விழாவில் கலந்துகொண்டு பேசியது.
கொழும்பு 4ம் குறுக்குத்தெருவில் நடந்த மீலாத் விழாவில் முன்னாள் அமைச்சரும் மேயருமான ஜாபீர் ஏ. காதர் அவர்களுடன் கலந்து கொண்டு பேசியது.
டயஸ்பிளேஸ் மீலாத் விழாவில் கலந்து கொண்டு பேசியது.

## நிதியப்பணிகள்

கொழும்பு முத்தமிழ் மன்றத்தின் தலைவர் ஆர். ஆர். கே. டேலர் அவர்களின் தலைமையில் நடந்த பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் இடம் பெற்ற பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற கொழும்பு மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவ மாணவியர்களுக்கு முறையே 1000 ரூபா, 500 ரூபா, 250 ரூபா என்று பரிசில்கள் வழங்கி பாராட்டியமை. இவ்விழாவில் அமைச்சர் தொண்டமான், ஆர். யோகராஜன் பா. உ., திருமதி. வசந்தாவைத்தியநாதன், கலைஞர் சில்லையூர் செல்வராஜன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றிய நிறைந்த நிகழ்ச்சியை நடத்தியதுமறக்க முடியாத நிகழ்வு.

அஸீஸ் மன்றத்துடன் இணைந்து ஈ. கே. பாரன் அவர்களுக்கு நிதி சேர்த்து வழங்கிய நிதிப்பணி.

குணசித்திர நடிகை மணிமேகலை நோயுற்றிருந்தபோது அவருக்கு கலைஞர்கள் பலரின் உதவியுடன் ரூபா 5000 நிதியுதவி வழங்கியதோடு.

ஜே. பி. றொபேட் டின்குமார் ஏ. ராஜபாண்டியன், ராதாமேத்தா ஜே. பி., ஸ்ரீ முருகன், எம். எம். ஏ. லத்தீப் ஆகியோருடன் அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களைச் சந்தித்து மேலும் ரூபா 5000 நிதி உதவி பெற்றுக் கொடுத்தது.

ஜனாப் அஸீஸ் அஷ்ரப் அவர்களின் உதவியுடன் மறைந்த நாடகக் கலைஞர் ஹாஜா முகதீன் அவர்களின் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதையும் அவர் நினைவு கூருகிறார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரும் கொழும்பு மத்திய தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் விடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான பீட்டர் கெனமன் அவர்களுக்கு சுகததாச விளையாட்டரங்கில் நடந்த பொன்விழா அமைப்புக்குழு உறுப்பினர்களில் ஒருவராக இருந்து விழாசிறப்புற நடந்தேற ஒத்தாசை புரிந்தது.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவில் நிற்போர்

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

கல்வியறிவுள்ளவர் முகத்திலிருப்பவைதான் இரண்டு கண்களாகும். கல்வியறிவில்லாதவன் முகத்திலிருப்பவை இரண்டு புண்களாகும் எனக்கூறுகிறார் வள்ளுவர்.

தனது கல்வியறிவுக்குக் காரணமாகயிருந்து தனது கண்களைக் காப்பாற்றித்தந்த கம்பளை மர்ஹூம் பிச்சை காக்கா அவர்களைக் கண்களில் நீர்மல்க நினைவு கூறுகிறார் கம்பளைதாசன் அவர்கள்.

கல்விக்கு உயிர்கொடுத்தோர்மரணிப்பதில்லை என்பது அண்ணலார் (ஸல்) அவர்களின் பொன் மொழியாகும். தனது கல்விக்கும் வழி காட்டியதன் மூலம் இறந்தும் இறவாப்புகழடைந்துள்ள கம்பளை பிச்சை காக்கா எஸ். எம். முகமதலி அவர்கள் தமது நெஞ்சில் நிறைந்திருக்கின்றனர் என்று கூறுகிறார். கம்பளைதாசன்.

இன்னும் தனது கலைவளர்ச்சிக்குக் காரணமாயிருந்த கண்ணியத்திற்குரிய ராஜேந்திரமாஸ்டர், பாடித்திரிந்து பிரிந்து போனகவிக்குயில்கள் பெரிய சாமியும் நாதனும், நன்மையிலும் தீமையிலும் கூடிக் கிடந்த இனிய நன்பர்கள் சீதக்காதி ஜலால். நேசக்கரம் நீட்டிப் பாசக்குரல் கொடுத்த முத்துமீனாட்சி அழகு ராஜாவும் இலேரியன் பர்னாந்தும். இனியவர்களாம். எச். பத்மநாதனும் பிலிப் மாஸ்டரும், நெஞ்சைவிட்டகலாத அமரர்கள். கலைஞர்கள் எஸ். எஸ். கணேசப்பிள்ளை, நவசோதியும் சேக்கரும், வெற்றிக்குத் துணைநின்ற சுஹைர் ஹமீத். சக நடிகர் ஏ. ராஜபாண்டியன் தாலிப். திரைப்படநடிகர் ஸ்ரீ சங்கர் ஆகியோர் இறப்புலகில் புகுந்துவிட்ட இனிய நண்பர்கள், என் சிறப்புக்குரிய தோழர்கள், இவர்களை நினைக்காத நேரமில்லை. என நெகிழ்வோடு கூறுகிறார் கலைஞர். கலைஞர் கம்பளைதாசனுடன் பல மேடைகளில் கலந்துகொண்ட "தினகரன்" துணையாசிரியர் ஏ. எம். அபூபக்கர், அருந்ததியர் சங்க முன்னாள் தலைவரும், தொழிற்சங்கவாதியுமான எம். வி. பாரதி ஆகியோரையும் கலைஞர் நினைவு கூருகிறார்.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோர் நினைவுகள்

தமிழக முதல்வர் - மக்கள் திலகம் எம். ஜி. ஆர். இயற்கை எய்தியது தொடர்பாக கொழும்பு மக்கள் சார்பில் மலையாள கலாலயத்தின் செயலாளர் சுப்பிரமணியதாஸ் அவர்களோடு இணைந்து கொழும்பு தப்ரபேன் ஹோட்டலில் இரங்கல் கூட்டத்தை நடத்தியதும், இந்த இரங்கல் கூட்டத்தில் அமைச்சர் தொண்டமான், சபாநாயகராக இருந்த பாக்கீர்மார்க்கார், தொழிற்சங்க செயலாளர் எஸ். செல்லச்சாமி, பிரபல திரையுலக நடிகரும் மக்கள் முன்னணியின் அமைப்பாளருமான விஜயகுமாரதுங்க ஆகியோரை இரங்கலுரையாற்ற அழைத்திருந்ததையும் நினைவு கொள்கிறார்.

மூதறிஞர் - முத்தமிழ்க் காவலர், "தமிழர் நாடு" இதழ் ஆசிரியருமான கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் மறைந்ததையடுத்து மறைவு குறித்த இரங்கற் கூட்டம் ஒன்றை விவேகானந்ததா கல்லூரி மண்டபத்தில் நடத்தியது.

இந்தியக் குடியரசுத் தலைவர் ராஷ்டிரபதி ஜாஹிர்ஹுஸைன் காலமானது தொடர்பான இரங்கற் கூட்டத்தை எச். பத்மநாதன் தலைமையில், தோழர் மணவைத்தம்பி அவர்களோடு இணைந்து நடத்தியது. இக்கூட்டத்தில் "கல்கண்டு" ஆசிரியர் தமிழ் வாணன், சொல்லின் செல்வர் செ. இராசதுரை ஆகியோரை கலந்துகொள்ள வைத்துச் சிறப்பித்தது.

தமிழரசுக் கட்சியின் தலைவரும் காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினருமான "தமிழரசுத்தந்தை" எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் மறைவு குறித்து கொழும்பில் இரங்கற் கூட்டத்தை எற்பாடு செய்து நடத்தியது.

காங்கிரஸ் தலைவர் காமராஜரின் நினைவுதினக் கூட்டத்தை இலங்கை நாடார் சங்கத்தின் உதவி பெற்று விவேகானந்த சபை மண்டபத்தில் எஸ். என். ஆறுமுகநெய்னார் நாடார் தலைமையில் சிறப்பாக நடத்தியது.

விக்டர் செல்வம் அவர்களது அழைப்பின் பேரில் தோழர் இளஞ்செழியனுடன் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட அறிஞர் அண்ணாவின் இரங்கற் கூட்டங்கள் பலவற்றில் கலைஞர் கலந்து கொண்டார்.

இலங்கை கலைஞர்கள் சார்பாக கெங்காதரன் அவர்கள் தலைமையில் பிரதான வீதியிலிருந்து நாராயணகுரு மண்டபம் வரை ஊர்வலம் நடத்தி, ஆசியஜோதி ஜவர்கலால் நேரு அவர்களின் இரங்கல் கூட்டத்தை சிறப்பாக நடத்தியது.

"மலையோரம் வீசிய காற்று" புகழ் கலைஞர் ஏ.ராஜபாண்டியன் அவர்களது அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு இரங்கலுரை நிகழ்த்தியது.

கொழும்பு நகர உதவி மேயர் மர்ஹூம் ஜனாப் முகமது ஸெயின் அவர்களது இரங்கல் கூட்டம், சாஜன் நல்லதம்பி, நிஹால் சில்வா இரங்கற் கூட்டங்கள்.

திரைப்படத் தயாரிப்பாளர் கலைஞர் வி. பி. கணேஷன் நினைவஞ்சலிக் கூட்டம் 25-8-96ல் ஸ்ரீ கணபதி வித்தியாலயத்தில் நடைபெற்றது. அஷ்ரப் அஸீஸ் பிரதி அமைச்சர் அலவி மௌலான, வி. பி. தேவராஜ் எம். பி., ஆர். யோகராஜன் எம்.பி. உட்பட பல்துறைக் கலைஞர்களும் கலந்துகொண்ட இந்த இரங்கற் கூட்டத்தை கலைஞர் கம்பளைதாசன் தலைமை வகித்து நடத்தினார். இது ஒரு சிறப்பு இரங்கல் நிகழ்வாகவே அமைந்திருந்தது.

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டு நிகழ்வுகள்

ஜனாப் ஜின்னா தலைமையில் இஸ்லாமிய பேரவையினர் நடத்திய, பேராசிரியர் கௌஸ்முகதீன் அவர்களின் நூல் வெளியீட்டு விழாவினை நடத்திச் சிறப்புறச் செய்தது.

'டீஎம். பீ. அவர்கள் எழுதிய "ஆற்றல் மிகு தலைவர் அப்துல் அஸீஸ்" என்ற நூல் வெளியீட்டு விழா அஷ்ரப் அஸீஸ் தலைமையில் நடைபெற்ற மேடையில் திருமதி. நல்ல செல்வம் இராமநாதன் ஆகியோருடன் சொற்பெருக்காற்றி ஆஸீஸ் அவர்கள் ஆற்றலை வெளிப்படுத்தியது.

கல்முனை எழுத்தாளர் ஆதம்பாவா, மருதூர் மஜீத் ஆகியோர் அங்கு நடத்திய புத்தகவெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியமை.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வேலணை வீரசிங்கம் அவர்களால் நடத்தப்பட்ட கலைஞர் வரணியூரான் அவர்களின் "இரைதேடும் பறவைகள்" என்ற புத்தகவெளியீட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியது.

எழுத்தாளர் ஞானப்பிரகாசம், கவிஞர் ராதாமேத்தா ஆகியோர் எழுதிய "அலைஓசை" "கலைவிழி" ஆகிய நூல்களின் வெளியீட்டுவிழாக்களில் கலந்துகொண்டு நூல்விமர்சன உரையாற்றியது.

இதுபோன்ற இன்னும்பல வெளியீடுகளில் கம்பளைதாசன் கலந்து சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது கலைஞரின் இலக்கிய ஈடுபாடுகளையும் இவர் கலந்துகொண்ட நிகழ்வுகள் உறுதி பகர்கின்றன. சமூக சேவையாளர் ஜனாப் எம் .ஏ. ரஃபீக் அவர்களின் தலைமையில், காயிதேமில்லத் ஜனாப் இஸ்மாயில் ஸாஹிப் அவர்களின் நூற்றாண்டு விழாவினை வெகுவிமரிசையாக நடத்த உதவிய கலைஞர், தகவல் ஒலிபரப்புத் துறைபிரதி அமைச்சர் அலவி மௌலானா அவர்களையும் இவ்விழாவில் பாராட்டி உரையாற்றினார்.

அரசகரும மொழித்திணைக்கள அலுவலர் க. நவசோதி எம். ஏ. அவர்களின் தலைமையில் பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் நூற்றாண்டு விழாவினை தோழர் கி. வீரமணி. எச். பி. பாண்டியன் கலை அன்பன் ஆகியோரது ஒத்துழைப்புடன் நடத்தியது.
மாத்தளையில் மாத்தளைநஜீர், கார்த்திகேசு ஆகியோரால் நடத்தப்பட்ட பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் தோழர் ஏ. இளஞ்செழியனுடன் கலந்து கொண்டு பாரதிதாசன் நினைவுப் பேருரையாற்றியமை.

கொழும்பு பல்கலைகழக பேராசிரியர் சந்திரசேகரன், பேராசிரியர் தில்லைநாதன் ஆகியோர் கலந்துகொண்ட பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றியது.

இது போன்ற பல நூற்றாண்டு விழாக்களையும் நினைவு விழாக்களையும் நடத்தியும் பேருரை சிறப்புரை, சிற்றுரைகளை வழங்கியும் பெரியவர்களை நினைவு படுத்தி அவர்களின் சிந்தனைகளை மக்களுக்கு நினைவு படுத்தும் பணியில் கலைஞர் கம்பளைதாசன் செயற்பட்டு வந்தது அவரது முற்போக்கு எழுச்சி சிந்தனைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

பதுளையில் தங்கராஜ் அவர்களது தலைமையில் நடந்த இலங்கை திராவிட முன்னேற்றக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தின் மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இ. தி. மு.க. செயற்பாடுகள் கொள்கைகளை தெளிபடுத்தி உரையாற்றினார்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரி. வி. சென்னன் அவர்களின் ஆதரவில் நுவரெலியா, ராகலை-உடபுசலாவையில் நடத்தப்பட்ட தைத்திருநாள் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியது.

சாவகச்சேரியில் கல்லூரி அதிபர் எ. பி. செல்லையா அவர்களின் ஏற்பாட்டில் அங்கு நடந்த தமிழ் விழாவில் அப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த வி. என் . நவரத்தினம், கா. பொ.. இரத்தினம் ஆகியோருடன் தமிழ் மொழிச் சிறப்பு உரை நிகழ்த்தியமை. இவ்விழாவில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களிடம் கலைஞர் ஆசியும் பாராட்டும் பெற்றிருந்தார்.

1991ல் இந்துசமய கலாச்சார அலுவல்கள் அமைச்சினால், அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட நாடகக் கலை பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பித்து.

எம். எம் நாவஸ்ரீன் அவர்களது ஏற்பாட்டில், "சினிமாப்பாடல்களில் ஆபாசம் " என்ற தலைப்பில் திருமதி. அன்னலட்சுமி இராசதுரை தலைமையில் கொழும்பு சிற்றி மிஷன் மண்டபத்தில் நடந்த பட்டிமன்றத்தில் கலந்த கொண்டது.

பத்திரிகை எழுத்தாளர் எம். ஏ. ஷாஜஹான் தலைமையில் மாத்தளையில் இயங்கிவந்த வளர்மதி படிப்பக கட்டிடத்தை திறந்து வைத்துப்பேசியது.

சீறாவின் உமறுப்புலவர் விழாவை பேராசிரியர் ஜனாப் எம். எம். உவைஸ் தலைமையில் நடத்திய கலைஞர், அமைச்சர் அல்ஹாஜ் எ. ஏச். எம். அஸ்வர், கலைஞர் கலீல், பேராசிரியை நயிமாசித்தீக், ஆகியோரையும் இவ்விழாவில் கலந்து கொள்ளச் செய்து சிறப்பித்தார்.

எட்டியாந்தோட்டையில் சிங்களத்திரைப்பட நடிகர் பெப்டிஸ்ட் பெர்னான்டோ தலைமையில் நடந்த நடிகவேல் டீன்குமார் ரசிகமன்றத்தின் ஆரம்பவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியது.

ஆரம்பவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியது பிரபல டி. வி. நாடக இயக்குனர் விஜயராஜாவுடன் "வண்ணப்பூக்கள்" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நடித்துச் சிறப்பித்தது.
1992ல் நடந்த தமிழ்க் கலாமன்றத்தின் முதலாவது ஆண்டுவிழாவில் எஸ். சண்முகநாதன் அவர்களுடன் கலந்துகொண்டு புரட்சிகவிஞர் பாரதிதாசன் சிறப்புப்பற்றி உரையாற்றியது.

1968ல் முற்போக்கு எழுத்தாளர் மு. பஹீர் அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'கல்கி' விழவில் கலந்துகொண்டு சிறப்பித்தது.

1977ல் சிருஷ்டி இலக்கிய வாசகர் வட்டம் நடத்திய திரைப்பட நாடக வளர்ச்சிக் கருத்தரங்கில் கலைஞர் வித்தகன் அவர்களுடன் கலந்து கொண்டது.

1977ல் புனித அந்தோனியர் இளைஞர் முன்னணி த. மணி அவர்கள் தலைமையில் நடத்திய பேராசிரியர் கைலாசபதி நினைவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தது.

கொழும்பு ஜிந்துப்பிட்டியில் இயங்கும் முத்தமிழ்மன்றம், கலைவாணிநாடகமன்றம், கதிரவன் கலைக்கூடம், ஆகிய அமைப்புகளின் ஆதரவில் நடைபெறும் கலை, இலக்கிய கலாச்சார நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான நீதவான் வேலணை வேணியன் (கங்கை வேணியன்) அவர்கள் 'நோர்வே' நாட்டுக்குப் பயணம் சென்றபோது கிருபாஸ்ரோர் உரிமையாளர் என் சொர்ணலிங்கம் உதவியுடன், அஸீஸ் மன்றம் நடத்திய வழியனுப்பு உபசரணைவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியது.

கொழும்பில் தமிழ் மகளிர் கல்லூரி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற பல்வேறு மன்றங்களின் கோரிக்கையை வலியுறுத்துமுகமாக, தமிழ் இளைஞர் கலாச்சாரக் கூட்டமைப்பின் செயலாளரின் "ஏற்பாட்டில் - டாக்டர் செந்தில் வேல் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரையாற்றியது.

இ. தி. மு. க. சார்பில் முதல் தடவையாக தமிழ் நாடு சென்று இலங்கை திரும்பிய தோழர் மணவைத்தம்பி அவர்களுக்கு முதுமாணி க. நவசோதி அவர்கள் தலைமையில் ஹோட்டல் நிப்பனில் கொழும்பு நண்பர்களால் நடத்தப்பட்ட வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியது.

இதுபோன்ற பல பொது வைபவங்களில் கலைஞர் கலந்து கொண்டு சிறப்பித்தமை இவரது நாடளாவிய வெகுசனத் தொடர்புகளுக்கு ஒரு எடுத்துக்காட்டுகளாகின்றன.

முகவைசர்தார் மேஜர் சுந்தரராஜ் ஏற்பாட்டில், இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டான் அவர்கள் 1977ல் ஐ. தே.க. அரசில் அமைச்சர் பதவி எற்றதை பாராட்டி நாகலிங்கம் ஜே. பி. அவர்கள் தலைமையில் கமலாமோடி மண்டபத்தில் நடந்த விழாவில், கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கியது.



கொழும்பில் வேலணை வீரசிங்கம் அவர்களால் வெளியிடப்பட்ட வரணியூரான் எழுதிய இரைதேடும் பறவைகள் என்ற நூல் வெளியீட்டுவிழாவில் கம்பளைதாசன் பேசிக் கொண்டிருப்பதையும் பத்திரிகையாளர்களான திரு. ஆ. சிவநேசச்செல்வன், திரு. ஆர். சிவகுருநாதன், திரு. தில்லை நடராசா, திரு. சிவராசா ஆகியோர் கலந்திருப்பதையும் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூரும் நிகழ்ச்சிகள்

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிய கலைத்துறை, சமூகத்துறை, இலக்கியத்துறை போன்ற பல்வேறு நற்பணிகளில் ஈடுபட்டும், பங்கேற்றும் கலைஞர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் பல. இவற்றுள் நினைவில் உள்ள சிலவற்றை இச்சந்தற்பத்தில் நினைவு கூறுகிறார் கலைஞர்கம்பளைதாசன்.

தனது அன்பிற்கும் மதிப்புக்கும் பாத்திரமான பெரியார்களது பிறந்தநாள் விழாக்கள், வரவேற்பு நிகழ்ச்சிகள் நிதியுதவிப்பணிகள், நூல் வெளியீடுகள், நூற்றாண்டுவிழாக்கள் இரங்கள் கூட்டங்கள் போன்ற பல்வேறு வைபவங்களில் கலந்து கொண்டவற்றை அவர் இங்கு நினைவு பகர்வதில் மகிழ்ச்சியடைகிறார்.

1968ல் ஹோட்டல் பாரிசில் இயக்குனர்பாலன் தலைமையில் தோழர் ஏ. இளஞ்செழியன் இணைந்து நடத்திய கலைவாணர் பிறந்த நாள் விழா.

தோழர் மூ. வேலாயுதம் ஜே. பி. தலைமையில் இயங்கும் அருந்ததியர் சங்க அழைப்பின் பேரில் அவர்களால் நடத்தப்படும் பலவிழாக்களில் தோழர்கள் பொன்னம்பலம் நெ. க. சிவஞானம் அவர்களது அழைப்பில் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் புலவர் ஆப்தீன் தலைமையில் நடந்த கலைவாணர் விழாவில், வானொலி புகழ் சானா, திருமதி இராஜேஸ்வரி சண்முகம் ஆகியோருடன் கலந்து கொண்டது.

தோழர் ஈமா. அருமை தாசன் அவர்கள் தலைமையில் நடந்த பெரியார் பிறந்த நாள் விழாக்கள்.

க. நவஜோதி எம். ஏ. அவர்கள் தலைமையில் விவேகானந்த சபை மண்டபத்தில் நடந்த அண்ணா பிறந்தநாள் விழாவில் உலகத்தமிழர் இளைஞர் போவைத் தலைவர் இரா. ஜனார்த்தனம் அவர்களுடன் கலந்து கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெம்பட்டாவீதி கலைவாணர் மன்றம் நடத்திய கலைவாணர் பிறந்த நாள் பெரு விழா. எம். ஜி. ஆர் மன்றம் நடத்திய கலைவாணர் பிறந்ததின விழா, கலைஞர் கருணாநிதி பொதுப்பணிமன்றம் நவஜோதி எம். ஏ. அவர்கள் தலைமையில் நடத்திய கலைஞர் பிறந்தநாள் விழாவும் அன்னதான நிகழ்வுகளும், நடிகர் திலகம் சிவாஜி மன்றம் மஹ்ரூப் தலைமையில் நடத்திய சிவாஜி பிறந்த தின விழா.

கரு - பத்மநாதன் அவர்கள் தலைமையில் தொண்டா பொதுப்பணிமன்றம் நடத்திய தொண்டமான் பிறந்தநாள் விழா. இந்நாளையொட்டி சிறு நீரக மாற்றுச் சிகிச்சைக்கான உதவியும், உயர் கல்வி மாணவர்களுக்கான உதவியும் வழங்கல் தொடர்பான நிகழ்ச்சிகள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மாவட்ட கிளை அமைப்பாளர் நஜீமுத்தீன் ஏற்பாட்டில் மும்மதப்பிரமுகர்கள் தலைமையில் ஜிந்துப்பிட்டி ஜெயந்திநகர் தெவஸ்தான மண்டபத்தில் நடந்த மகாத்மா காந்தி பிறந்த தின விழாவில் உரையாற்றியது.

ஈ. கே. பாரன் அவர்கள் தலைமையில் பண்டாரநாயக்க மாவத்தையில் நடந்த விழாவில் ஏழை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்களை வழங்கி உரையாற்றியது.

பிரபல தொகுப்பாசிரியர் நவாஸ் அவர்களின் ஏற்பாட்டில் கொட்டாஞ்சேனை தமிழ் வித்தியாலயத்தில் நடந்த கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் விளாவில் கலந்து கொண்டு பேசியது.

கம்பளைதாசன் அவர்களது நாவன்மை வலுவடையவும், வளம் பெறவும் இவ்விழாக்கள் இவருக்கு துணையாக இருந்துள்ளதை எம்மால் உணர முடிகின்றது.

தமிழக முதல்வர் மறைந்த மக்கள் திலகம் எம். ஜி. ஆர் அவர்கள் 1965 ம் ஆண்டு சரோஜாதேவியுடன் இலங்கைவந்தபோது எம். ஜி. ஆர். மன்றத்தின் சார்பாக கோல்போஸ் கோட்டலில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் எம். ஜி. ஆர். அவர்களை சிறப்பாக வரவேற்ற மகிழ்வான நிகழ்ச்சி.

தமிழகத்தின் அன்றைய பிரபல நடிக நடிகையரான எஸ். எஸ். இராஜேந்திரன் விஜயகுமாரி. டி. வி. நாராயணசாமி ஆகியோருக்கு கொழும்பு தப்ரபேன் கோட்டலில் எச்பத்மநாதன் தலைமையில் நடந்த வரவேற்பு விழா.

பன்னூலாசிரியர் டி. எம். பி. அவர்களது தலைமையில் திரைப்பட நடிகர் முஸ்தபா பின்னணிப்பாடகர் ஹுஸைதீன் ஆகியோருக்கு இடம்பெற்ற வரவேற்பு நிகழ்ச்சி.

காலஞ்சென்ற தோழர் எச். பத்மநாதன் அவர்கள் தலைமையில் தமிழக மேயராக இருந்த மைனர் மோசஸ் அவர்களது வருகையின்போது நாராயணகுரு மண்டபத்தில் அவரை வரவேற்ற நிகழ்ச்சி.

தமிழ்நாடு தமிழரசுக் கழகத் தலைவரும், சிலம்புச் செல்வருமான ம. பொ. சிவஞானகிராமணியார் வருகைதந்தபோது கொழும்பு தப்ரோன் ஹோட்டலில் தோழர் த. மணியினால் நடத்தப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி.

தமிழகத்தின் பிரமுகர்களான ஆர்க்காடு விரசாமி, பா. உ. சண்முகம் அவர்களை வரவேற்று நவசோதி எம். ஏ. அவர்கள் தலைமையில் நடந்த விவேகானந்த மண்டப வரவேற்பு நிகழ்ச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக துணைமேயர் இரா. சடகோபன் அவர்கள் கொழும்பு வந்தபோது ஐந்துலாம்படி மெரினா ஹோட்டலில் இடம் பெற்ற வரவேற்பு உபசரணை நிகழ்ச்சி.

புசல்லாவ மயில்வாகனம் தலைமையில் புசல்லாவ வாடிவீட்டில் சென்னை நகர முதல்வர் மைனர் மோசஸ் அவர்களுக்கு அழிக்கப்பட்ட வரவேற்பு வைபவம்.

கொழும்பு வந்திருந்த தமிழக சட்டசபை உறுப்பினர்களான திருவாளர்கள் தூயமணி, நடராஜன் ஆகியோருக்கான வரவேற்பு உபசரணைக்கூட்டம்.

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் மா. தங்கவேலர் அவர்களுக்கு கிறீன்லான்ட் ஹோட்டலில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சி.

கொழும்பு மாவட்ட இ. தொ. கா. அமைப்பாளர் ஜெரால்கு பெர்னாந்து ஏற்பாட்டில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜா அவர்கள் தலைமையில் இ. தொ. கா. தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுக்கு நடத்திய மாபெரும் விழாவில் சிறப்புச் சொற்பெருக்காற்றி பாராட்டுப்பெற்றது....

முகவை சர்தார் மேஜர் சுந்தரராஜன் அவர்களின் ஏற்பாட்டில் அன்றைய மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்களை கௌரவிக்குமுகமாக ஜெயந்திநகரில் எல்மண்ட் பீரிஸ் தலைமையில் நடந்த வரவேற்பு விழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட அமைச்சர் தொண்டமான் அவர்களுடன் சொற்பொழிவாற்றியது........

முகவை மாவட்ட நகர சபைத் தலைவர் ஷேக்சுல்தான் அவர்களுக்கு நடத்தப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றியது. கலைஞர் கலந்து கொண்ட மேற்கூறிய பொது நிகழ்வுகள், சமூகசேவையில் அனுபவங்களையும், மக்கள்பிரதி நிதிகளின் நட்பையும், ஆழுமையையும் இவருக்கு ஏற்படுத்தியிருக்கும் என்பதற்கான சான்றுகளாகும்.

தோழர் எல். எம். எஸ். தலைமையில் ஜனாதிபதி பரிசு பெற்ற தோழர் நடிகமணி கே. ஏ. ஜவாஹிர் அவர்களுக்கு முதலாவது பாராட்டு விழாவினை கொழும்பு "தப்ரபேன்" ஹோட்டலில் நடத்தி பாராட்டி மகிழ்ந்தார் கலைஞர்.

சேவையாளர் பாலசுந்தரம் அவர்கள் சமாதான நீதவானாக நியமனம் பெற்றதைக் கௌரவிக்குமுகமாக, பூபால வினாயகர் ஆலய அறங்காவலர் செந்திவேல் ஜே. பி. தலைமையில் ரன்முத்து ஹோட்டலில் நடந்த வரவேற்பு விழாவில் சர்வதேச அரசியல் சட்ட ஆலோசகர் நீலன் திருச்செல்வம் பா. உ., கொழும்பு மேயர் கணேசலிங்கம், பி. பி. தேவராஜ் பா. உ., தோழர் மாணவைத்தம்பி ஆகியோருடன் பாராட்டுரை வழங்கியது.

கொள்ளுப்பிட்டி சசாக்கா மண்டபத்தில் வீரகேசரி ஓவியக்கலைஞர் வீ. கே. அவர்களுக்கு வேலணைவீரசிங்கம் அவர்களால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் கலந்துகொண்டு பாராட்டுரையாற்றியது.

கொழும்பு மேயர் கணேசலிங்கம் அவர்களை பாராட்டுமுகமாக பாலசுந்தரம் ஜே. பி. அவர்கள் தலைமையில் நடந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியது. கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில் நடந்த கலைஞர் . வி. பி. கணேசன் அவர்களின் "புதிய காற்று" திரைப்படப் பாராட்டுவிழாவில் சிறப்புரை வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவில் ஒரு கருத்து!

சமூகஒளி கலைஞர் கம்பளைதாசன் ஜே.பி. அவர்களைப்பற்றிய, கலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை சம்பந்தமான வரலாற்றை எனது அறிவுக்கெட்டியவரை. எழுதியுள்ளேன். பொய்யைக் கலப்பதற்குப் பேரறிவு தெவைப்படுமா ? என்பது எனக்குத் தெரியாது. நான் உண்மையை மட்டுமே கூறியிருக்கிறேன்.

கலைஞர் கம்பளைதாசன் அவர்களின் தகுதிக்கேற்ப அவரைப்பாராட்டியிருக்கிறேன். பாராட்டு என்றுவரும்போது அங்கே மிகைப்படுத்தல் கலக்கப்படுவது தவிர்க்கமுடியாது.

ஒருவரைப் போற்றுகின்ற அதே வேளையில் இன்னொருவரை தூற்றுகின்ற உள்ளநோக்கம் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை.

> "இதனை இதனால் இவன் முடிக்கும் - என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்."

என்ற குறளின் கருத்துக்கொப்ப இந்தப்பொறுப்புக்கு என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். ஏற்றுக்கொண்டபணியினைச் செம்மையாகச் செய்துள்ளேனா என்பதை அறிக்கையிடும் பொறுப்பு எனக்குரியதல்ல.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஸ்வர் ஹாஜியார் அவர்களால் வாழ்த்தப்பட்டு (நூருல் மில்லத்) சமூகஒளி என்ற கௌரவப்பட்டத்தை பெற்ற பாராட்டுக்குரிய கலைஞர் கம்பளைதாசன், கொழும்புமாவட்டப்பாராளுமன்ற, உறுப்பினர் ஆர். யோகராஜா அவர்களின் சிறப்பான சிபார்சின் மூலம் கொழும்பு மாவட்ட சமாதான நீதவானாகவும் பதவி பெற்றார். இடைவிடாது தொடர்ந்த இரவது கலைச்சேவையும், பொதுப்பணிகளும் சமூக முன்னேற்ற செயற்பாடுகளும், மறுமலர்ச்சிக்கருத்துக்களும் இன்று அவரை மக்கள்முன் உயர்த்தியுள்ளன.

மதிப்புக்குரிய சமூகஒளி கலைஞர் கம்பளைதாசன் ஜே.பி. அவர்கள் மேன்மேலும் சகல சிறப்புக்களையும் பெற்று சமூகத்தில் முன் ஒளி பெற எனது மனமுவந்த வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசக்கரங்கள்

சமூகஒளி கலைஞர் கம்பளைதாசன் ஜே.பி. அவர்களின் நாற்பது ஆண்டுகால பொதுப்பணிகளைப் பாராட்டும் விழாவினை நடத்துவதற்கு தெரிவாகிய திருவாளர்கள் : வேலணை வீரசிங்கம், ஆர். இராதா கிருஷ்ணன், கரு-பத்மநாதன், எம். ஏ. றபீக், எம். கனகராசா ஆகியோர் அடங்கிய செயற்குழு, கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் 15-12-1996ல் நடத்திய விழாவில் இந்நூல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org